விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 03 புதன்கிழமை (19.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

## புகையிரத விபத்து தொடர்பில் யாழ் பொலிஸ் நிலையத்தில் ஆராய்வு

### பாதுகாப்பற்ற கடவைகளை தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் நடக்கும் புகையிரதம் உள்ளிட்ட வாகன விபத்துக்கள் குறித்து ஆராய்கின்ற விசேட கூட்டமொன்று நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயசுந்தர தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வட பிராந்திய புகையிரதத் திணைக்களத்தின் மாவட்டப் பொறியியலாளர், யாழ்ப்பாண மாநகர சபை பொறியியலாளர், தனியார் போக்குவரத்து சேவை மற்றும் வடபிராந்திய போக்குவரத்து சபை நிர்வாகிகள், 24

## இலங்கை கல்வித் தரத்தை உயர்த்த இந்திய அரசாங்கம் உதவிடும்

### யாழில் தமிழக கல்வி அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கல்வி தரத்தை உயர்த்துவதற்கு, இந்திய அரசு பல உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் என தெரிவித்த தமிழ் நாட்டு கல்வி அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், இருநாட்டு பிரதமர்களின் பங்குபற்றலுடன் இலங்கையில் நடக்கும் உதவித் திட்டங்களுக்கு தமிழ் நாட்டு 23

## 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

# குற்றவாளிகளை தண்டிக்க சர்வதேசத்திடம் மனு கையளிப்பு

(கொழும்பு) இலங்கை இராணுவத்தினரால் கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். குறித்த விடயம் தொடர்பாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்து காணாமல் ஆக்கப்பட்ட 11 இளைஞர்களின் குடும்ப ஒன்றியத்தினர் சர்வதேசத்திடம் தங்கள் கோரிக்கை மனுக்களை நேற்று கையளித்துள்ளனர்.

கனேடிய தூதரகம், அமெரிக்க தூதரகம், ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம், பிரித்தானிய தூதரகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியக் காரியாலயம் ஆகிய இடங்களுக்கு சென்று அங்கு சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் தங்களது மனுக்களை கையளித்துள்ளனர்.

தொடர்ந்து கடந்த ஆட்சிக் காலத்தில் அரங்கேறியிருந்த இந்த கடத்தல் சம்பவத்தை கண்டித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதனை தொடர்ந்து சுவிஸ் தூதரகத்திற்கு சென்ற குடும்ப ஒன்றியத்தினர் அங்கு. தூதுவரின் பிரதிநிதியான டெமியானோவிடம் மனுவொன்றை கையளித்தனர்.

அங்கு அவர்களுக்கு சுவிஸ் தூதரகத்தின் ஏற்பாட்டில் தேநீர் விருந்துபசாரமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேநீர் விருந்து 23

### விளையாடிக் கொண்டிருந்த சிறுவன்

## திடீர் மூச்சுத் திணறலால் கீழே விழுந்து மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வீட்டிற்கருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனொருவன் திடீரென மயங்கி கீழே விழுந்து மரணித்துள்ளான்.

மேலும், அச்சிறுவனுக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளதாகவும், சிறுவனை உடனடியாக 24

## சீனி விலை அதிகரிப்பு; பால்மா விலை குறைப்பு

(கொழும்பு)

சீனியின் விலை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் உயர்வடையவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் ஒரு கிலோ சீனியின் விலை 20 ரூபாயினால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வாழ்க்கைச் செலவு குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய, அரசாங்கம் குறித்த அதிகரிப்பை 24

## புத்தரின் உருவம் பொறித்த சேலையை அணிந்திருந்த

### சட்டத்தரணிக்கு எதிராக வழக்கு பதிவு

(யாழ்ப்பாணம்)

புத்தரின் உருவம் பொறித்த சேலையை அணிந்திருந்த இளம் பெண் சட்டத்தரணிக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனனர்.

பெண் சட்டத்தர 23

## விக்னேஸ்வரனுக்கு எதிரான வழக்கு பிற்போடப்பட்டது

(கொழும்பு)

வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைகள் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

வட மாகாண முன்னாள் 24

## விஜயகலா எம்.பிக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை

### பாராளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக சட்டமா அதிபர் வழக்கு தொடர நடவடிக்கையெடுத்துள்ளதாக சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் பொது எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் இதனை தெரிவித்துள்ளார்.

விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட விடுதலைப் புலிகள் 24

## 195 ரூபாயால் சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க அனுமதி

### இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை

(கொழும்பு)


சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை 195 ரூபாயால் அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயுவின் விலைகளை அதிகரிக்குமாறு வாழ்க்கை செலவுகள் தொடர்பான குழு முன்வைத்த யோசனையை கவனத்தில் கொண்டு அமைச்சரவை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளமை, 24

## பலாலி விமான் அபிவிருத்தியை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது - நிமல் சிறிபால



(கொழும்பு)

பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகளை இந்தியாவிடம் ஒப்படைக்கப் போவதில்லை என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு. விமல் வீரவன்சவால் 23

### அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக

## மகசின் சிறைச்சாலையில் அடையாள உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக மகசின் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் இன்று அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 14 ஆம் திகதியில் இருந்து இன்றுடன் 6 ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து 23

## சர்வதேச சுற்றுலா தினம் யாழில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

"சுற்றுலாவும் டிஜிற்றல் பரிமாற்றமும்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச சுற்றுலா தின தேசிய நிகழ்வு இம்முறை யாழ் மாவட்டத்தில் பிரமாண்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண சுற்றுலாப் பணியகம் அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் 26,27,28 ஆம் திகதிக 24

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அமைந்துள்ள Abans Plc காட்சி யறைக்கு காட்சியறை உதவியாளர் தேவை.

வயதெல்லை:-18-25 முடிவுத்திகதி:-31.09.2018

அனுப்ப வேண்டிய முகவரி:

Abans Plc
இல.136, பலாலி வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்

viber:-
0772544767

Abans

(5711)


## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

கிளி/ கோணாவில் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 29.09.2018 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற வுள்ளது. அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பழைய மாணவர்கள்**
**கிளி/கோணாவில் ம.வி**

(சி-3871)

## தவறிவிட்டது

யோகீசுவரன் விஜயகுமார், மே/பா.சு.திருமலைசாமிசர்மா பருத் தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்ற விலாசமிடப் பட்டவரின் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதி, புகைப்பரிசோதனை அறிக்கை, தேசிய அடை யாள அட்டை 580950612V என்பன அடங்கிய நீலநிறதோல்பை ஒன்று யாழ்சத்திரச் சந்திக்கும் அரியாலை மாம்பழம் சந்திக்கும் இடை யில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக்கண்டு எடுத்தால் கீழ்க்காணும் விலாசங்கள் ஒன்றில் ஒப்படைக்கவும்.

யோ.விஜயகுமார்
மே/பா.சு.திருமலைசாமிசர்மா
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

யோ.விஜயகுமார்
(226/2) 224/3 (ஏ)
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்:-0212215667, 0773663319

(5718)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(சி-3861)



## காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம், பொருத்தம் பார்த்தல், நிச்ச யித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவை களை மிகவும் திருப்திகரமாக செய்து வரு கின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

பதிவுகள் இலவசம்.

தொடர்புகளுக்கு:- 076 835 1932, 021 223 2222 உரும்பிராய்.

(5713)


# மணி விழா வாழ்த்து



## திரு.கந்தையா காசிலிங்கம் (SLTS 2-1)

பிறந்த திகதி:-1958.08.22
முகவரி:-854, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.
கல்வி கற்ற பாடசாலைகள்:
கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம்
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
தொலைபேசி இல:-0771980621
தொழிற்தகைமை:பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்
ஆசிரியர் வகுப்பு: (SLTS 2-1)

Congratulations

## ஆசிரிய நியமனம் சேவை விபரம்

| | |
|---|---|
| 1.கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க | 20.04.1998-03.06.2000 |
| 2.மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை | 24.06.2000-20.06.2002 |
| 3.கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க | 21.06.2002-31.12.2007 |
| 4.கிளி/இராமநாதபுரம் ம.வி | 01.01.2008-08.01.2008 |
| 5.கிளி/கிளாலி றோ.த.க | 16.01.2008-25.04.2010 |
| 6.கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க | 26.04.2010-21.08.2018 |

ஆசிரியரின் அளப்பரிய சேவையைப் பாராட்டி அவரின் ஓய்வுக்காலம் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-பாடசாலைச் சமூகம்**
**கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை**

(சி-3870)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வாகனங்களினை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல் 2018/ 2019

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் அறிவியல் நகர், கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் உத்தியோகபூர்வ போக்குவரத்து தேவைக்கான வாக னங்களை தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது. வாக னங்கள் வழங்கப்படும் போது சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலை கள், ஆண்டுவரி போன்ற அனைத்து செலவினங்களையும் உரிமையாளர் பொறுப்பேற்றல் வேண்டும். வாகனம் பாவித்தமைக்கான கொடுப்பனவுகள் மட்டும் கிலோமீற்றர் அடிப்படையில் வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் விலைமனு ஆகிய ஆவணங்களையும் மேலதிக விபரங்களையும் 17.10.2018 மாலை 02.00 மணிவரை பிரதிப்பதி வாளர் / பொது நிர்வாகக்கிளை யாழ்ப்பாணம் அல்லது பிரதிப்பதிவாளர் / பொது நிர்வாகக்கிளை அறிவியல்நகர் நிர்வாக அலுவலகத்திலும் அலுவலக நாட்க ளில் பெற்றுக்கொள்ளலாம். மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 1000.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது நிதியாளர் யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் மக்கள்வங்கி கணக்கிலக்கம் 162100 160000880 வைப்புச் செய்து பெற்ற பற்றுச்சீட்டை பிரதிப்பதிவாளர் பொது நிர்வாகக்கிளை யாழ்ப்பாணம் அல்லது பிரதிப்பதிவாளர் / பொது நிர்வாகக் கிளை அறிவியல்நகர் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் யாவும் மூடிய கடித உறை யின் இடது பக்க மேல் மூலையில் " பல்கலைக்கழக உத்தியோகபூர்வ தேவை க்காக வாகனங்கள் வழங்குதல் 2018/ 2019" என குறிப்பிட்டு 17.10.2018 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் தலைவர், கேள்விச் சபை, த.பெ எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடுதல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் யாவும் 17.10.2018 அன்று பி.ப 2.30 மணிக்கு பல்கலைக்கழக சபா மண்டபத்தில் மனுதாரர்கள் அல்லது மனுதாரர்கள் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்**
கேள்விச்சபை
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் (சி-3866) 23.09.2018

## INVITATION FOR BIDS

### UNIVERSITY OF JAFFNA
### Hotel Accommodation Service 2018/2019

1. Sealed Quotations are invited for the **"Hotel Accommodation Service 2018/2019 for the University of Jaffna"** from the competent registered Hotels. The bidder should have a star class hotel and registered under Government entity – Tourism Development Authority/Northern Tourism Development Association.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for award, the successful bidder shall not have been blacklisted by any government organization.
4. Interested bidders may obtain further information from the **Deputy Registrar, General Administration, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9.00hrs to 16.00hrs.**
5. A complete set of Bidding documents in English language shall be purchased by the bidders on the submission of a written request to the **Deputy Registrar (General Administration), University of Jaffna (T.P 021 222 6517)**, from **25th of September, 2018** until **11th of October, 2018** from **9.00hrs to 15.00hrs**, upon payment of a non-refundable deposit of **Rupees one thousand (Rs1000/-) at the shroff counter of the University of Jaffna.**
6. Bids shall be delivered or sent by registered post to the **Registrar, University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 10.00hrs on 12th of October, 2018.** Bids will be opened soon after closing at the **Board room of the University of Jaffna**, in the presence of the bidder's representatives who choose to attend.
7. Please indicate at the top left hand corner of the envelope with title **"Hotel Accommodation Service 2018/2019 UJ/GA/HA/2018/19 (1)".**
8. Bids shall be valid for a period of **90 days** from the date fixed for closing of bids or any extended period.

**Chairman,**
Department of Procurement Committee,
University of Jaffna.
P.O.Box 57, Thirunelvely, Jaffna. (C-3868) 21.09.2018

# இறுதிப் போரில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் படுகொலை



## சு.க. அதிருப்தி அணியின் கருத்தை முற்றாக மறுத்தது படைத் தரப்பு

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு விட்டதாக, அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட அணி தெரிவித்துள்ள கருத்தை இராணுவம் முற்றாக மறுத்துள்ளது.

அரசாங்கத்திலிருந்து விலகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட அணியின் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் முன்னாள் அமைச்சர்களான, எஸ்.பி.திஸாநாயக்க, டிலான் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி, இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுவிட்டதாக தெரிவித்தார்.

இந்நிலையில், இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எவரையும் இராணுவத்தினர் கொலை செய்யவில்லை எனவும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் கருத்தை முழுமையாக நிராகரிப்பதாகவும், இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்தார்.

இறுதி யுத்த காலத்தில் எஸ்.பி.திஸாநாயக்க அரசாங்கத்தின் முக்கிய அமைச்சராக இருந்துள்ளார். ஆகவே அவ்வாறான ஒருவர் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டதாகக் கூறும் கருத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியுமா? என்றும் அவரிடம் வினவியபோது, இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டதாகக் கூறும் கருத்தானது, அடிப்படை ஆதாரமற்றது என்றும் ஆகவே இவ்வாறான கருத்துகளை இராணுவம் முழுமையாக நிராகரிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, சரணடைந்தவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டதாகக் கூறிய கருத்தை குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா நிராகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெலிக்கடைக்கும் பரவியது தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் பரவியுள்ளதாக சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் மோசமான நிலையில் இருப்பதாகவும் இவர்களின் விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவரான சட்டத்தரணி சேனக பெரேரா இதுதொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

"அநுராதபுர சிறைச்சாலையில் 8 கைதிகள் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தின் நிலைமை இப்போது புதிய திருப்பத்தை அடைந்துள்ளது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைக்கலாம் என்று கருதி, சிறை அதிகாரிகள், உண்ணாவிரதத்தை முன்னின்று நடத்துபவர்களில் ஒருவரான தில்லைராஜ் என்ற கைதியை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றினர்.

ஆனால் தில்லைராஜ் வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அவரைப் போன்று 30 வரையான கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் கூட உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்து கொள்வார்கள்.

இலங்கை அரசாங்கம் இப்போது அநுராதபுர, வெலிக்கடை என்று இரண்டு உண்ணாவிரதப் போராட்டங்களை உருவாக்கியுள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எட்டு கைதிகளும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் வழக்கு விசாரணையின்றி ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறைகளுக்குள் இருக்கிறார்கள்.

நான் தில்லைராஜை சென்று பார்வையிட்டேன். அவர் மோசமாக நடத்தப்படுகிறார். சிறைச்சாலை வைத்தியசாலைக்கு கைவிலங்குடனேயே அனுப்பப்பட்டிருக்கிறார். இது கைதி ஒருவரின் உரிமையை மீறுகின்ற செயல்.

தமக்கு துரிதமாக புனர்வாழ்வு அளித்து விடுவிக்க வேண்டும் என்று அரசியல் கைதிகள் கோருகின்றனர்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியைக் கொலை செய்ய சதி; குற்றவாளியை கைதுசெய்ய வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

(கொழும்பு)



ஜனாதிபதியையும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரையும் கொலை செய்ய சதி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் உரிய விசாரணை நடத்தாமல் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது எனவும், விசாரணையின் முடிவில் ஒன்றில் குற்றவாளியைக் கைது செய்ய வேண்டும் அல்லது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தியவரைக் கைது செய்ய வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமாகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# டொலர் ஒன்றின் விலை 200 ரூபாவாக அதிகரிப்பதைத் தடுக்கமுடியாது-பந்துல



(கொழும்பு)

சிங்கப்பூர் உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் டொலர் ஒன்றின் விலை 200 ரூபாவாக அதிகரிப்பதைத் தடுக்க முடியாது என கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டிலிருந்து வெளியேறும் நிதிப் பெறுமானம் அதிகரிக்கும் போது ரூபாவின் பெறுமதி குறைந்து டொலரின் பெறுமானம் அதிகரிக்கும் என்பது பொதுவான ஒன்றாகும்.

சிங்கப்பூர் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தாமல் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலே டொலர் ஒன்றின் விலை 170 ரூபாவை அடைந்து விடும்.

நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய பொருட்களின் எண்ணிக்கையை அதிகரித்து, வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிப்பதே டொலரின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியுமான ஒரே வழி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை கொழும்பு தனியார் வானொலிச் சேவையொன்றில் இடம்பெற்ற நேரடி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.(இ-7)

# எமில், ரங்கஜீவவின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

சிறைக்கைதிகள் 27 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா மற்றும் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவின் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவ ஆகிய இருவரையும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது 27 கைதிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனவரியில் எரிபொருள் விலை குறைய வாய்ப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதமளவில் உலக சந்தையில் எரிபொருள் விலை குறையலாமென தெரிவித்த உள்ளக அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஜே.சீ. அலவத்துவல, உள்நாட்டிலும் எரிபொருள் விலை குறைவடையும் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ யுத்தம் முடிந்த பின்னர் நாட்டு மக்களுக்கு பல சலுகைகளை பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார். எரிபொருள் விலை குறையும் என்றும் கூறினார். யுத்தம் முடிந்து 5 வருடங்கள் ஆகியும் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

எனவே, மகிந்த அணிக்கு எரிபொருள் விலை குறைப்பு பற்றி பேசுவதற்கு தகுதியில்லை என்றும் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் எரிபொருள் விலை உலகச்சந்தையில் குறைவடையலாமென எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

**Special Treatment for Rheumatism**

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# 'பை - பை' இலங்கை
## அதிர்ச்சி கொடுத்தது ஆப்கான்


அரைச்சதமடித்த ரஹ்மத்

ஆசிய கிண்ண கிரிக்கெட்டில் இருந்து 5 முறை சம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணி பரிதாபமாக வெளியேறியது. அபாரமாக ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 91 ஓட்டங்களால் வெற்றி பெற்று அதிர்ச்சி கொடுத்தது.

ஐக்கிய அரபு எமிரேட்ஷில் (யு.ஏ.இ.,) ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. அபுதாபியில் நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் அஸ்கர். துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

### நல்ல ஆரம்பம்

ஆப்கானிஸ்தான் அணிக்கு மொகமட் ஷாஜத், இஷானுல்லா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. மலிங்க, துஷ்மந்த சமீர, திசர பெரேரா பந்துகளை பவுண்டரிக்கு அனுப்பிய ஷாஜத், அகில பந்தில் ஒரு சிக்சர் விளாசினார்.

இவர்கள் இருவரும் முதல் விக்கெட்டுக்காக 57 ஓட்டங்களைச் சேர்த்தபோது தனஞ்செய 'சுழலில்' ஷாஜத் (33) ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஒத்துழைப்புக்கொடுத்த இஷானுல்லா, திசர பெரேரா வீசிய 19ஆவது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். இவர், 45 ஓட்டங்கள் எடுத்திருந்த போது தனஞ்செய பந்தில் வெளியேறினார். ஷேஹன் ஜெயசூர்யா 'சுழலில்' அணித் தலைவர் அஸ்கர் (1) பெவிலியன் திரும்பினார்.

### ரஹ்மத் அரைச்சதம்

பொறுப்பாக ஆடிய ரஹ்மத் ஷா, நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தார். திசர பெரேரா பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய இவர் அரைச் சதமடித்தார். தனஞ்செய. மலிங்க பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்த ரஹ்மத், 72 ஓட்டங்கள் எடுத்தபோது சமீர பந்தில் ஆட்டமிழந்தார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ஹஸ்மதுல்லா ஷஹிதி (37) ஓரளவு கைகொடுத்தார். சமீர பந்தில் ஒரு சிக்சர் அடித்த மொஹமட் நபி (15), மலிங்க 'வேகத்தில்' வெளியேறினார். திசர பெரேரா பந்தில் நஜிபுல்லா ஜத்ரன் (12) போல்டானார்.

### பெரேரா அசத்தல்

அடுத்து வந்த ரஷிட் கான், மலிங்க வீசிய 49ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள் விளாசினார். திசர பெரேரா வீசிய 50ஆவது ஓவரின் இறுதி பந்தில் குல்பதின் (4), ரஷிட் கான் (13), முஜீப் (0) சரணடைந்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் ஆப்கானிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

அப்தாப் அலாம் (7) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் திசர பெரேரா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

### அதிர்ச்சி ஆரம்பம்

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. முஜீப் ரஹ்மான் வீசிய முதல் ஓவரில் குசால் மெண்டிஸ் (0) ஆட்டமிழந்தார். குல்பதின் பந்தை சிக்சருக்கு அனுப்பிய தனஞ்செய டி சில்வா (23) 'ரன்-அவுட்' ஆனார்.

ரஷிட் கான் 'சுழலில்' குசால் பெரேரா (17) போல்டானார். பொறுப்பாக ஆடிய உபுல் தரங்க (36) ஓரளவு கைகொடுத்தார். ஷேஹன் ஜெயசூர்யா (14) 'ரன்-அவுட்' ஆனார். மொஹமட் நபி 'சுழலில்' சிக்கிய அணித் தலைவர் மத்யூஸ் (22) நிலைக்கவில்லை. அடுத்து வந்த தசன் ஷனகா (0), அகிலா தனஞ்செய (2) ஏமாற்றினர். திசர பெரேரா (28) ஆறுதல் கொடுத்தார். ரஷித் பந்தில் மலிங்க (1) ஆட்டமிழந்தார்.

இறுதியில் இலங்கை அணியால் 41.2 ஓவர்கள் வரையே தாக்குப்பிடிக்க முடிந்து 158 ஓட்டங்களை எடுக்க முடிந்தது.

இதனால் 91 ஓட்டங்களால் ஆப்கான் வெற்றி பெற்றது.

ஏற்கனவே தொடரின் ஆரம்ப போட்டியில் பங்களாதேஷிடம் வீழ்ந்த இலங்கை அணி, தொடர்ந்து 2ஆவது தோல்வியை பதிவு செய்து அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழந்தது. இதன் காரணமாக பிரிவு 'பி' இல் இருந்து பங்களாதேசுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் 'சுப்பர் 4' சுற்றுக்குள் நுழைந்தது.

### முதல் வெற்றி

அபாரமாக ஆடிய ஆப்கானிஸ்தான் அணி, சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில் இலங்கைக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்தது. இதுவரை இவ்விரு அணிகள் 3 முறை மோதின. இதில் இலங்கை 2 (2014, 2015), ஆப்கானிஸ்தான் ஒரு முறை (2018) வெற்றி பெற்றன.

### 249 ஓட்டங்கள்

இப்போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 249 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டி வரலாற்றில் இலங்கைக்கு எதிராக தனது அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கையை பதிவு செய்தது. இதற்கு முன், 2015ல் டுனிடினில் நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் 232 ஓட்டங்கள் எடுத்திருந்ததே அதிகபட்சமாக இருந்தது.

## சாதிப்பாரா சர்ப்ராஸ்? ரோசம் காட்டுவாரா ரோகித்
# இந்தியா - பாகிஸ்தான் மோதல்


பாக்., அணித் தலைவர் சர்ப்ராஸ் அஹமட்


இந்திய அணித் தலைவர் ரோகித்சர்மா

கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்த இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆசிய கிண்ண போட்டி இன்று நடைபெறுகிறது. பந்துக்கு பந்து பரபரப்புக்கு பஞ்சம் இல்லாத பரபரப்பான போட்டியில் எந்த அணி வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பில் ரசிகர்கள் திளைக்கின்றனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஷில் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. ஆறு அணிகள் பங்கேற்கும் இத்தொடரில் 'நடப்பு சம்பியன்' இந்திய அணி 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இன்று தனது இரண்டாவது மற்றும் கடைசி லீக் போட்டியில் பரம எதிரி பாகிஸ்தானை சந்திக்கிறது. கடந்த 2008 மும்பை பயங்கரவாத தாக்குதலுக்குப் பின் இரு நாடுகள் இடையிலான உறவு பாதிக்கப்பட்டது.

### நீண்ட இடைவெளி

பின் 2012ல் ஒருவழியாக இந்தியா வந்து விளையாடியது பாகிஸ்தான் அணி. மீண்டும் பயங்கரவாத தாக்குதல் தலையெடுக்க, ஐ.சி.சி., நடத்தும் தொடரில் மட்டும் மோதுகின்றன.

இந்த வரிசையில் ஆசிய கிண்ண தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இம்முறை பலப்பரீட்சை நடத்துகின்றன.

இரு அணிகளும் குறைந்தபட்சம் இரு முறை மோதவுள்ளன. ஒருவேளை இறுதிக்கு சென்றால் ஒரே வாரத்தில் மூன்றாவது முறையாக மோதல் நிகழலாம்.

### பதிலடி கொடுக்குமா?

கடைசியாக இந்திய அணி (180 ஓட்டங்கள் வித்தியாசம்) சம்பியன்ஸ் டிரொபி இறுதியில் பாகிஸ்தானிடம் தோற்றது. இதற்கு இந்திய அணி இன்று பதிலடி கொடுக்கும் என நம்பப்படுகிறது. ஹோலி இல்லாதது பெரும் ஏமாற்றமாக உள்ளது. இவருக்குப் பதில் தலைவராக களமிறங்கும் ரோகித் சர்மா 'சீறிப் பாய' வேண்டும். தவானை பொறுத்தவரை ஹொங்கொங் அணிக்கு எதிராக சதம் விளாசிய உற்சாகத்தில் உள்ளார்.

### ஆரம்பம் பலம்

பாகிஸ்தான் அணிக்கு இமாம் உல் ஹக், பகர் ஜமான் கூட்டணி ஆரம்பம் கொடுக்கவுள்ளது. இருவரும் இணைந்து 8 போட்டிகளில் (இதுவரை 878 ஓட்.,) 4 முறை 100க்கும் மேல், 2 முறை 50க்கும் மேல் என ஓட்டங்கள் சேர்த்துள்ளனர்.

இதனால், இந்தியாவுக்கு எதிராக கடந்த முறை சதம் அடித்து தொல்லையாக அமைந்த பகர் ஜமானை விரைவில் வெளியேற்றுவது முக்கியம். பாபர் ஆசம், அணித் தலைவர் சர்பராஸ், அனுபவ வீரர் சோயப் மலிக் என துடுப்பாட்ட படை நீள்கிறது.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு சிறப்பாக உள்ளது. மொகமட் அமிர், ஹசன் அலி இருவரும் பந்தை 'சுவிங்' செய்வதில் வல்லவர்கள். இவர்களுடன் ஹொங்கொங்கிற்கு எதிராக 3 விக்கெட் வீழ்த்திய உஸ்மான் கானும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம். 'சுழலில்' ஷாதப் கான் கைகொடுக்கலாம்.

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த மற்றும் நடக்கப்போகின்ற விடயங்களை மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-

0212232222, 0768351932

உரும்பிராய் (5713)

**Faculty of management Studies & Commerce**
**University of Jaffna - Sri Lanka**

1st, 2nd, 3rd & 4th years Bachelor of Business Administration
1st, 2nd, 3rd & 4th years Bachelor of Commerce

**First Semester Examination - 2017 (Old Syllabus)**

The applications are called for the above examinations of the Faculty of management studies & Commerce. The candidates can receive the application forms at the Dean's office, Faculty of Management Studies & Commerce, from 17.09.2018. The candidates should pay Rs.250/= to each subject at the People's Bank, University branch and the receipt should be annexed with the application form.

The filled application forms should be submitted at the Dean's Office, Faculty of Management Studies & Commerce on or before 21.09.2018.

Registrar,
University of Jaffna,
Sri Lanka.

(C-3867)

# கடலட்டை பிடித்த எட்டுப்பேர் வடமராட்சியில் சிறைபிடிப்பு!

## பொலிஸாரின் கோரிக்கை நிராகரிப்பு கடற்றொழிலாளர்கள் திரண்டதால் பதற்றம்



(கரணவாய்)

வடமராட்சி வடபகுதி கடற்பரப்பில் கடலட்டை பிடித்த எட்டுப் பேரை உள்ளூர் மீனவர்கள் பிடித்து வந்ததையடுத்து பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

அண்மையில் மயிலிட்டிக்கு வருகைதந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் விஜிதமுனி செர்ய்சா ஆகியோர் வடமராட்சி கடற்றொழிலாளர்களுடன் கலந்துரையாடிய போது வடபகுதி கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டதாக தெரிவித்ததாக உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் கடலட்டை பிடிப்பவர்கள் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து வந்ததனால் ஆத்திரமுற்ற வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசத்தினர் வடமராட்சியில் உள்ள அனைத்து சங்கங்களின் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணியுடன் தமது தொழில் நடவடிக்கைகளை நிறுத்தி கடலட்டை பிடிப்பவர்களை சிறைப்பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதில் சக்கோட்டை கடற்றொழிலாளர்கள் அட்டை பிடிக்கும் மூன்று படகுகளை பறிமுதல் செய்து தமது சங்கத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கொண்டு வந்தனர்.

இதனை அறிந்த வடமராட்சியிலுள்ள கடற்றொழிலாளர்களும் அங்கு கூடினர்.

சக்கோட்டை கடற்றொழிலாளர் சங்கத்திற்குச் சென்ற பருத்தித்துறை பொலிஸார் சிறை பிடிக்கப்பட்டவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரினர்.

இதனால் பொலிஸாருக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாக சிறை பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்க முடியாது என கடற்றொழிலாளர்கள் திட்டவட்டமாக கூறினர். இதனால் பதற்றம் நீடித்தது.

இதனையடுத்து நீரியல் வளத்திணைக்களத்தின் யாழ்ப்பாண அதிகாரி சுதாகரன் சம்பவ இடத்திற்குச் சென்று கடற்றொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இருப்பினும் சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிக்க முடியாது என கடற்றொழிலாளர்கள் உறுதியாகக் கூறினர். வற்புறுத்தி விடுவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டால் போராட்டம் நடத்தப் போவதாக எச்சரித்தனர். (இ-60)

# உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தங்களைக் குறுகிய கால புனர்வாழ்வு வழங்கி விரைவில் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையில் இருந்து அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவருகின்ற எட்டுப் பேரினதும் நியாயமான கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம், அவர்களின் உயிரைக் காப்பாற்றவேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது என அவ்வமைப்பின் தலைவர் க. ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச. தனுஜன், அ. சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், ஒன்பது வருடங்களுக்கு மேல் முறையான விசாரணையோ அல்லது விடுதலையோ இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த அரசியல் கைதிகளும் மனிதர்களே. அவர்களும் அன்பான குடும்பத்துடனும், பாசமான பிள்ளைகள், உறவினர்கள், சுற்றத்தாருடனும் மகிழ்வாக வாழப் பிறந்த இந்த நாட்டின் பிரஜைகளே என்பதை அனைவரும் உணர்ந்து, வேறு எந்தவொரு வழியுமற்ற நிலையில், மீண்டும் மீண்டும் அவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்கின்ற உணவுத் தவிர்ப்புப் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்.

அத்துடன், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுவிக்குமாறும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விலக்கிக்கொள்ள கோரியும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நாம், அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் அடைக்கப்பட்டு வாழ்வுரிமை மறுக்கப்படும் சமூக அநீதிக்கு எதிராக குரல்கொடுக்க இன, மத, மொழி, பிரதேச எல்லைகளைத் தாண்டி, மனிதாபிமானமுள்ள அனைவரையும் அணிதிரளுமாறு அழைத்து நிற்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன் மாணவர்களுக்கான சீருடை வவுச்சர்கள்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு பாடசாலை சீருடைக்காக வழங்கப்படும் வவுச்சர் கடந்த வருடத்திலும் பார்க்க கூடுதலான பெறுமதியைக் கொண்டதாக இருக்குமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலை மாணவர் சீருடைக்காக பண வவுச்சர் மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சீருடைக்காக செலவிடப்படும் தொகைக்கு ஏற்ப, புதிய பரிந்துரையைப் பெற்றுக் கொள்வதற்கு கல்வி அமைச்சின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாடசாலை மாணவர்களுக்குத் தண்டனை வழங்குவதைத் தடை செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவதை தடைசெய்யும்வகையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும், எதிர்பார்ப்பதை விடவும் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவது அதிகரித்துள்ளதால், இது தொடர்பான கலந்துரையாடலை முன்னெடுப்பது அவசியமெனவும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்சன குணவர்தன தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் உடல் ரீதியான தண்டனைகள் மற்றும் வன்முறைகளை நிறைவு செய்வதற்கான தேசிய வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி செயலகம், சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான அமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா மன்றம் என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படக் கூடாதென்ற சுற்றுநிருபமானது முதற் தடவையாக 1913 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளதாகவும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்சன குணவர்தன மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

19.09.2018

புரட்டாதி 3, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 06.04 மணிக்கு

தசமி பின்னிரவு 12.30 மணிவரை

பூராடம் பிற்பகல் 01.29 மணிவரை

சுபநேரம் 4.33-06.03 மணிவரை

இராகுகாலம் 12.03-01.33 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | ராகு |
| செவ், கேது | சந்திராஷ்டமம் மிருகசீரிடம், திருவாதிரை இரவு 2.06 மணிக்கு மகர-சந் | | |
| சனி, சந் | | குரு சுக் | சூரி, புத |

மீனம்



முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மேடம்



உடல்நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

இடபம்



ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள்.

மிதுனம்



ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

கும்பம்



அந்நியதேசத் தொடர்புகள் எண்ணியபடியே கைகூடும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

கடகம்



வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், கௌரவமான நாள்.

மகரம்



திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழில் சம்பந்தமான பயணங்கள் இடம்பெறலாம், இறை வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.

சிம்மம்



பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

தனுசு



வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று கைகூடலாம்.

விருச்சிகம்



நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழிபோடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு.

துலாம்



புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

கன்னி



கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பயணங்களால் பலனுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும்.



அல்வாய் வடக்கைச் சேர்ந்தவரும் சுவிட்சர்லாந்தில் வசிப்பவருமான கவிஞர் பைந்தமிழ் செம்மல் திருமதி நிர்மலா சிவராசசிங்கத்தின் அந் தமிழ் அறுபது மரபுக் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் சாகித்திய ரத்னா தெணியான் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சுவிஸ் கிளைத் தலைவர் செல்லையா சிவராசசிங்கம் நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை ஓய்வுநிலை அதிபர்களான க.கணேசன், மா.அன்பழகன், ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் க.சின்னராசா,கவிஞர்.சி.கணேசன், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் வழங்கினர். அறிமுக உரையை ஆசிரியைதிருமதி.நவநீதமணி சயிதா, நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் வேல்நந்தகுமார், மதிப்பீட்டுரைகளை கலாநிதி. சு.குணேஸ்வரன், ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் கொற்றை கிருஸ்ணானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# போர் வெற்றிச் சின்னங்களை அகற்ற ஐ.நா.ஆணையாளரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமத்துவத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பினால் இலங்கையிலுள்ள போர் வெற்றிச் சின்னங்களை அகற்றுவதற்கான கோரிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் உட்பட பல தரப்பட்டோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பிரதமர் அலுவலகத்தில் இருந்து குறிப்பிட்ட பரிந்துரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

இலங்கையில் ஆயுத யுத்தம் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினரால் போர் வெற்றிச் சின்னங்கள் வடக்கு, கிழக்கில் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தின் போது பாரிய இழப்புகளை சந்தித்த தமிழ் மக்கள் யுத்தம் முடிவடைந்து 9 வருடங்க்ள் கடந்த நிலையிலும் அந்த தாக்கத்தில் இருந்து இதுவரை மீள வரமுடியவில்லை.

அதற்கு இராணுவத்தினால் அமைக்கப்பட்ட போர்ச் சின்னமும் ஒரு காரணமாக இருக்கின்றது.

போர்ச் சின்னங்களை கடந்து செல்லும் பொழுது தமிழ் மக்கள் மன ரீதியான உளைச்சலுக்கு ஆளாவதுடன் யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புகளை வேதனையுடன் நினைவுகூர வைக்கின்றது.

இலங்கையில் வாழும் மக்களிடையே நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்துவத்திற்கும் நிலையான சமாதானத்தை நோக்கி பயணிப்பதற்கும் போர்ச்சின்னங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு சமத்துவத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் இணைப்பாளர்ராகுலன்கந்தசாமி தனது கோரிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)





யாழ்.மத்திய கல்லூரியில் உத்தியோகபூர்வ பணி ஜனாதிபதி மக்கள் சேவை நடமாடும் சேவை கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் தயானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதில் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், திறைசேரியின் மேலதிக ஆணையாளர் நாயகம், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராசா, த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சக்தி

## போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் வருடாந்தம் நடத்தும் கட்டுரை, சிறுகதை, கவிதை, ஓவியப் போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

- போட்டிகள் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என இரு பிரிவுகளின் கீழ் நடத்தப்படும்.
- ஆக்கங்கள் சொந்த ஆக்கங்களாகவும் ஏற்கனவே ஊடகங்களில் வெளிவ்ராத ஆக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.
- ஒருவர் ஒரு ஆக்கத்தினை மட்டுமே அனுப்ப முடியும்.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதிநாள் 31. 10. 2018. அனுப்ப வேண்டிய் முகவரி கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம், இல:1166/15, அருளம்பலம் ஒழுங்கை,நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**கட்டுரைப்போட்டி**

தலைப்புக்கள்

1.நான் கண்ட மாற்றுத்திறனாளி

2.மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிடுவோம்

3.மாற்றுத்திறனாளிகள் மீதான சமூகத்தின் பார்வை

4.நவயுக உலகில் மாற்றுத் திறனாளிகளின் பங்கும் பணியும்.

பாடசாலை மாணவர்கள் எனின் 250-300 சொற்கள் கொண்டதாகவும் பொதுமக்கள் எனின் 350- 400 சொற்கள் கொண்டதாகவும் கட்டுரையினைஅமைத்தல் வேண்டும்.

**கவிதைப்போட்டி**

1.ஊனம் என்பது குறையல்ல...

2.மாற்றுத்திறனால் உயர்ந்திடுவோம்...

3.நம்பிக்கையே கையாகும்...

4.ஆற்றலால்ஒருமாளிகை...

இவ்வரிகளில் ஒன்றைத் தெரிவுசெய்து அதனைத் தொடக்க வரியாகக் கொண்டு கவிதையினை அமைத்தல் வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் ஆயின் 20 வரிகளைக் கொண்டதாகவும் பொதுமக்கள் ஆயின் 40 வரிகளைக் கொண்டதர்கவும் கவிதைகளை அமைத்தல்வேண்டும்

**சிறுகதைப்போட்டி**

மாற்றுவலு மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியலைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதையினை அமைத்தல் வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் எனின் 250-300 சொற்கள் கொண்டதாகவும் பொதுமக்கள் எனின் 350-400 சொற்கள் கொண்டதாகவும் சிறுகதைகளை அமைத்தல் வேண்டும்.

**ஓவியப்போட்டி**

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் கோலங்களை மையப்படுத்தியதாய் ஓவியங்கள் அமைதல் வேண்டும். ஓவியத்தினை A4 தாளில் வரைதல் வேண்டும்.

ஆக்கங்களை A4 தாளில் கணனியில் தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான கையொழுத்தினால் எழுதியோ அனுப்பலாம்.

ஒவ்வொரு போட்டியிலும் 03 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும். தரமான ஆக்கங்கள் வலு சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். போட்டியாளர்கள் கீழுள்ள விண்ணப்பப் படிவத்தின் மாதிரி யினை தயாரித்து அதனை உரியமுறையில் பூர்த்தி செய்து ஆக்கத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

முழுப்பெயர், நிரந்தர முகவரி,தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், பிறந்த ஆண்டு, மாதம், திகதி, பாடசாலை மாணவர்களாயின் அ.பாடசாலையின் பெயர், ஆ.தரம்,உறுதியுரை.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆக்கம் எனது சொந்த ஆக்கம் என்பதனையும் இப்போட்டிக்காக எழுதப்பட்ட புதிய ஆக்கம் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் திகதி

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள்,சான்றிதழ், பதக்கம் என்பன கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின் போது வழங்கப்படும்.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

021205 4224, 076 638 5563, 077 324 6876 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்



(யாழ்ப்பாணம்)

நவாலி இடிகுண்டுப் பகுதியில் நீர்விநியோகத்திற்காக குழாய் பதிக்கப்பட்டுள்ள கிடங்கு மூடப் படாதுள்ளதால் அபாய நிலையில் காணப்படுகிறது.

இதேவேளை அதிகளவில் விபத்துக்கள் ஏற்படலாம் என அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளதுடன் இது குறித்து உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-7)

## கதிரைகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)


சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர் சபா குகதா.ஸின் நிதி ஒதுக்கீட்டில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள் வழங்கப்பட்டன. (இ-17)

## சிறப்புப் பட்டிமன்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் வல்லிபுர ஆழ்வார் ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கில் இடம்பெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று இரவு 8 மணியளவில் கதிர் தொலைக்காட்சியின் காப்பாளரும் ஓய்வுநிலை அரசாங்க அதிபருமான் வே.விஸ்வலிங்கம் தலை மையில் யாழ்.பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் "இன்றைய சமூகத்திற்கு பெரிதும் தேவைப்படுவது ஆன்மீகமா? அறிவியலா?" என்னும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறும். (இ

# சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



## திரு.கந்தர் தவபாலரத்தினம்



இலங்கை வங்கியில் 1983.12.10 இல் தற்காலிக ஊழியராக சேவையை ஆரம்பித்து 03.10.2001 இல் இருந்து நிரந்தர ஊழியராக கடமையாற்றி 18.09.2018 அன்று ஓய்வு பெற்ற திரு.கந்தர் தவபாலரத்தினம் அவர்களை தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துவதுடன் இன்றைய தினத்தில் 60 வருட பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**முகாமையாளரும், ஊழியர்களும்,**
**இலங்கை வங்கி, திருநெல்வேலிக் கிளை.**

(5702)

## மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்க வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப்பகுதியில் கண்டி வீதி, கச்சாய் வீதி மற்றும் தனங்கிளப்பு வீதி ஆகியன இணையும் சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபைக்கான மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்து அதன் ஊடாக எமது பிரதேசத்தின் தனித் துவத்தை வெளிப்படுத்தல் வேண்டும்.

மேலும் என்னால் சபைக்கு கொண்டு வரப்படுகின்ற பிரேரணைகளுக்கான அபிவிருத்தி வேலைகளினை முன்கொண்டு செல்வத ற்கான நடவடிக்கையினை மேற்கொ ள்ள வேண்டிய தார்மீகக் கடமை எனது பொறுப்பாகும்.

இவ் வருடம் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களுக்கு செயலுருவம் வழங்குகின்ற ஆண்டாக 2019 ஆம் ஆண்டு திகழும் என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகி றேன் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-7)

## தியாக தீபம் திலீபன் நினைவாக யாழ்.இந்துவில் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 2012 உயர்தரப் பிரிவு மாணவர்களினால் இரத்த தான முகாம் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இதில் மாணவர்கள், பொதுமக்கள், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், உணர்வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

## சிறுத்தை தோலுடன் ஒருவர் கைது

மொனராகலை -ஒக்கம்பிட்டிய - போகஸ்புர பிரதேசத்தில், சிறுத்தையொன்றின் தோலுடன் நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் 37 வயதுடையவரெனவும், அவரிடமிருந்து மீட்கப்பட்ட குறித்த தோலானது, யாலவனப் பகுதியில் கொலை செய்யப்பட்ட சிறுத்தையுடையதாக இருக்கலாமென சந்தேகிப்பதாக தெரிவித்ததுடன், குறித்த நபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


ஸ்ரீராம ஜெயம்



**இணுவில் திருப்பதி**
**அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய**
**வருடாந்த பிரமோற்சவ தினம்- 2018**
**13.09.2018 முதல் 22.09.2018 வரை**

19.09.2018 இன்று புதன்கிழமை
ஏழாம் நாள் ஸ்ரீ கிருஸ்ண திருக்கோலம்
**வயலின் இசை ஆராதனை:**
வயலின்-திரு.ப.சியாம் கிருஷ்ணா
மிருதங்கம்- திரு.நா.சிவசுந்தரசர்மா
முகர்சிங்-திரு.சி.செந்தூரன்
கடம்- திரு.கு.ரவிசங்கர்

021 224 2300

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

(5652)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8893

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8894

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BSc, MBA, ACCA/டுபாய்
தொ.இ: B/8895

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 36 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: B/8896

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 17 செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/1232

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 43
உயரம்: 5'
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/1250

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 46
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA/அரச தொழில்
தொ.இ: G/1261

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 29 சூரிசெவ் 7 இல்
உயரம்: 4'11"
தகைமை/தொழில்:HNDA, AAT, ACCA/கணக்காளர்
தொ.இ: G/1263

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ரங்கன் குடியிருப்பு மக்களின் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு

## சிறிதரன் எம்.பி. உறுதி

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ரங்கன் குடியிருப்பில் வாழும் மக்கள் குடிதண்ணீருக்காக அல்லற்படுகிறார்கள். தொடர்ச்சியாக நிலவிவரும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இவர்கள் தமது குடிநீர்த்தேவையைக்கூட பூர்த்திசெய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அப்பகுதி மக்களின் அவல நிலையை நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குடிநீர்ப் பிரச்சினைக்கான தீர்வை மிக விரைவாக பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார்.(2)

# கால்நடை வளர்ப்போர் திருட்டுக்கும்பல் தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்து

(கண்டாவளை)

கிளிநொச்சி மேற்கில், பூநகரி வழியாக யாழ்ப்பாணத்துக்கும் மாந்தை கிழக்கு வழியாக வவுனியாவுக்கும் மன்னாருக்கும் தொடர்ந்தும் கால்நடைகள் களவாகக் கடத்திச் செல்லப்படுவதாக, கால்நடை வளர்ப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன், வன்னேரிக்குளம், கோணாவில், முல்லைத்தீவின் கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், தென்னியங்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் உட்பட பல கிராமங்களில் இருந்து, தொடர்ச்சியாக கால்நடைகள் களவாகக் கடத்திச் செல்லப்படுகின்றன.

இது தொடர்பாக, அக்கராயன் பொலிஸ் நிலையம் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் மேற்படி பொலிஸ் நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கால்நடை திருடர்கள் தொடர்பாக மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்குமாறு, பொலிஸாரால் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (2-315)

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையில் ஆங்கிலம், கட்டுமானத்துறை, சுகாதாரத்துறை, விடுதி, சுற்றுலாத்துறை, தன்னியக்க மோட்டார் வாகன பொறியியல்துறை போன்ற பயிற்சிநெறிகளுக்கான போதனாசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதாக மாவட்ட முகாமையாளர் சி.சிவகௌரி தெரிவித்துள்ளார்.

எனவே இப் பதவி நிலைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உரிய சான்றிதழ்களுடன் மாங்குளம் வீதி, முள்ளியவளையில் அமைந்துள்ள எமது மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பான தகவல்களைப் பெற 021 206 1012 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அழைப்பை ஏற்படுத்துமாறு அவர் அறிவித்துள்ளார். (2)

# அக்கராயன் ஆசிரியவள நிலைய புனர்நிர்மாணப்பணிகள் நிறைவு

## விரைவில் இயங்கும்

(கண்டாவளை)

கிளிநொச்சி-அக்கராயன் ஆசிரிய வள நிலையம் விரைவில் இயங்கவுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.ஜோன்குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

அக்கராயன் ஆசிரிய வள நிலையத்தின் புனர்நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து வருகின்றன.

புனர்நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் தற்போது செயற்பட்டுவரும் ஆசிரிய வள நிலையச் செயற்பாடுகள் அக்கராயன் ஆசிரிய வள நிலையத்துக்கு மாற்றப்படவுள்ளதாக தெரிவித்தார். அத்துடன் தற்போது அக்கராயன் ஆசிரிய வள நிலையம் இயங்கி வரும் கட்டடம் மத்திய மகா வித்தியாலய நிர்வாகத்திடம் கையளிக்கப்படுமென அவர் மேலும் கூறினார். (2-315)

# திருத்தப்பணிக்காக குழாய் பொருத்துவதற்கு வெட்டப்பட்ட பகுதி இதுவரை மூடப்படவில்லை

(பனிக்கன்குளம்)

வவுனியாவிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியில் குழாய் பொருத்தும் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. எனினும் வவுனியா பூந்தோட்டம் செல்லும் வீதியிலுள்ள சந்திப் பகுதிக்கு அண்மையில் திருத் தப்பணிக்காக வெட்டப்பட்ட பகுதி கடந்த ஒரு மாதகாலமாக மூடப்படவில்லை.

இதனால் அவ்வீதியில் பயணிப்பதில் பல அசௌகரியங்களை மாணவர்கள், பொதுமக்கள், வயோதிபர்கள் எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது. பொதுமக்கள் பயணம் மேற்கொள்ளும் வவுனியா குடியிருப்பு பிரதான சந்திப் பகுதிக்கு அண்மையில் வெட்டப்பட்ட வீதியில் குழாய் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அதை மூடிவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் இன்று வரையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இரவு வேளையில் அவ்வீதியில் பயணம் மேற்கொள்ளும் போது பலர் விபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர். அப்பகுதியிலுள்ள குறித்த பகுதியை மூடி பாதுகாப்பாக பயணம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் பலர் கோரிக்கை விடுத்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் ஆட்டோச் சாரதிகள், பயணிகள், பொதுமக்கள் ஆகியோர் குற்றம் சாட்டுகின்றனர். (2-281)




# மின்கம்பங்களை மோதித்தள்ளிவிட்டு மரக்கடத்தல் வாகனம் தப்பிச்சென்றது

## மின்சாரமின்றி குடும்பங்கள் அவதி

(கண்டாவளை)

• முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் - அம்பலப்பெருமாள்குளம் கிராம காட்டில் இருந்து களவாக மரங்களை வெட்டி எடுத்துச் சென்ற வேளை மக்கள் ஒன்று சேர்ந்ததையடுத்து, மரங்களுடன் வாகனத்தை வேகமாகச் செலுத்தி இரு மின் கம்பங்களை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 16 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

அம்பலப்பெருமாள் குளத்தில் இருந்து தொடர்ச்சியாக மரங்கள் வெட்டப்பட்டு மக்கள் குடியிருப்பு வழியாக எடுத்துச் செல்லப்படுவதாக ஐயன்கன்குளம் பொலிஸாருக்கும் துணுக்காய் பிரதேச செயலகத்துக்கும் தொடர்ச்சியாக தகவல்கள் மக்களால் வழங்கப்பட்ட போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குறைபாடு காணப்படுகின்றது.

இக்கிராமத்தின் காட்டில் இருந்து கடந்த ஏழாண்டுகளாக மரங்கள் அழிக்கப்பட்டு அவை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறு கடந்த 16 ஆம் திகதி வாகனங்கள் இரண்டில் மரங்களை களவாகக் கொண்டு சென்றவர்கள் மின்கம்பங்கள் இரண்டை மோதித் தள்ளியதுடன், மரக்குற்றி ஒன்றினையும் வாகனத்தில் இருந்து வீழ்த்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் தற்போது பத்து வரையான குடும்பங்கள், தமது வீடுகளுக்கான மின்சாரத்தை இழந்துள்ளன. இது தொடர்பாக, கிராம அலுவலருக்கு, மக்கள் தகவல் வழங்கியுள்ளனர்.(2-315)

# இனந்தெரியாதவர்கள் இ.போ.ச. சாரதி மீது தாக்குதல் முயற்சி

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளிவில் இ.போ.ச சாரதி மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொள்ள முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

மதீனா நகரிலிருந்து வவுனியா இ.போ.ச. சாலைக்கு கடமைக்காக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த அகில இலங்கை மக்கள் போக்குவரத்து சபையின் தலைவரும் வவுனியா சாலையின் சாரதியுமான ஏ.ஆர்.பசீர் (வயது-34) மீது பூந்தோட்டம் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் வழிமறித்து தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த நிலையில் குறித்த இ.போ.ச. ஊழியர் அவர்களிடமிருந்து தப்பித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவம்தொடர்பான முறைப்பாடுகளை வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-281)

# 1 ஏபி,1 சீ தரத்தை சேர்ந்த பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்குட்பட்ட முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு, வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட 1ஏபி, மற்றும் 1சீ, ஆகிய தரங்களிலுள்ள பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப் பங்கள் வடக்கு மாகாணத்தி கடமையாற்றி வரும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 மற்றும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2, ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் 1ஏபி தரத்தில் உள்ள மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் 1சீ, தரத்தில் உள்ள மு/ஐயங்கன் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (வெற்றிடம் ஏற்படும் திகதி 14/11/2018). வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கீழ் 1சீ தரத்தில் உள்ள வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம் (வெற்றிடம் ஏற்படும் திகதி 15/09/2018), மடுக் கல்வி வலயத்தின் கீழ் 1சீ, தரத்தில் உள்ள மன்/காக்கையன் குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், வடமராட்சி கல்வி வலயத்தின் கீழ் 1சீ தரத்தில் உள்ள யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளுக்கே அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க, விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03, வருடகாலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும். இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மட்டுமே இலங்கை அதிபர் சேவை தரம் 2ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப் பரீட்சைகளின் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப் பட்டு சேவை நிலையம் வழங்கப்படும். இதற்கமைய, விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வெற்றிடங்கள் காணப் படும் வலயக் கல்வி அலுவலகங்களில் இருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரண்ப்படுத்தி அதனை வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக, செயலாளர், கல்வி அமைச்சு, வடக்குமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# புதிய வரி விதிப்புமுறை தொடர்பாக வர்த்தகர்களுக்கு அறிவூட்டல் கருத்தமர்வு

(குருமன்காடு)

வவுனியா வர்த்தக சங்கமானது மத்திய வங்கி ஊடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வவுனியா வர்த்தகர்களின் நன்மை கருதி "புதிய வரி விதிப்பு முறை தொடர்பான அறிவூட்டல் கருத்தமர்வு" ஒன்றினை மேற்கொண்டு ள்ளது.





வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று இது தொடர்பான கருத்தமர்வு இடம் பெற்றது.

வவுனியா வர்த்தக சங்கத்தின் தலைவர் சுஜன் சண்முகராஜா தலைமையில் இடம்பெற்ற கருத்தமர்வில் வளவாளர்களாக இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் பந்துல, உதவி ஆணையாளர்களான திருமதி தயாகரன், சிவபாலன், இலங்கை மத்திய வங்கி முகாமையாளர் திருமதி ஜெயரூபி, வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஆறுமுகம் அம்பிகை பாலன், வவுனியா மாவட்ட கணக்காளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது வரி செலுத்துதல் தொடர்பான விளக்கங்கள் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டதுடன், வர்த்தகர்களும் தமது சந்தேகங்கள் தொடர்பில் கேட்டறிந்தனர். (2-250)

# 8 ஆயிரத்து 103 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம்

# 14 ஆயிரத்து 999 குடும்பங்களுக்கு உலருணவு

## முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவுகின்ற கடும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள 8 ஆயிரத்து 103 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் இடம்பெற்று வருவதோடு வரட்சி நிவாரணம் முதல் கட்டமாக 6 ஆயிரத்து 824 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு இரண்டாம் கட்டமாக 7 ஆயிரத்து 296 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் வரட்சி தொடருமாக இருந்தால் மேலும் குடிநீர் விநியோகச் செயற்றிட்டம் நீடிக்க வேண்டிய நிலை ஏற்படுவதோடு பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்படும் எனறும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நிலவுகின்ற கடும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களது நிலைமைகள் தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவி வருகின்ற கடும் வரட்சி காரணமாக பாதிக்கப்ட்டுள்ள குடும்பங்களுக்கான குடிநீர் விநியோகம் எமது மாவட்டத்தில் இடம்பெற்று வருகிறது.

குறிப்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 390 குடும்பங்களுக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 3 ஆயிரத்து 129 குடும்பங்களுக்கும் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 222 குடும்பங்களுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரத்து 895 குடும்பங்களுக்கும் வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரத்து 996 குடும்பங்களுக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 471 குடும்பங்களுக்குமாக மொத்தமாக 8 ஆயிரத்து 103 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகத்தை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியினூடாக விநியோகித்து வருகிறோம்.

இருப்பினும் இதுவரை குடிநீர் விநியோகத்துக்கான நீரைப் பெறுவதில் பிரச்சினைகள் இல்லாத போதும் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பிரதேச செயலாளர், பிரதேச சபையினர் தகவல்படி குடிநீர் விநியோகத்துக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் நீர்வற்றிக்காணப்படுவதால் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இதற்கான நிதியைப் பெற்றுக் கொள்ள இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு தெரிவித்திருக்கிறோம்.

அத்தோடு வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான வரட்சி நிவாரணம், உலருணவு வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 14 ஆயிரத்து 999 குடும்பங்கள் கணக்கிடப்பட்டுள்ளன. அதில் முதல் கட்டமாக 6 ஆயிரத்து 824 விவசாயிகளுக்கு உலருணவு விநியோகம் இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 7 ஆயிரத்து 296 விவசாயிகளுக்கு உலருணவு விநியோகம் செய்துள்ளோம். வரட்சி தொடருமாக இருந்தால் மேலும் குடிநீர் விநியோகச் செயற்றிட்டம் நீடிக்க வேண்டிய நிலை ஏற்படுவதோடு பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (2-281)




# மன்னார் கீரி கடற்கரையில் நேற்று இடம்பெற்ற கரையோரத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்





(மன்னார்)

ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாக பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய கரையோரக் கடல் வளங்களைப் பேணும் வாரமும் கரையோரத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமும் நேற்று மன்னாரில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் கீரி கடற்கரை பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது மன்னார் மாவட்டச் செயலகப் பணிமனை உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொது மக்கள் உட்பட பலர் இணைந்து குறித்த கடற்கரை பகுதியில் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கீரி கடற்கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட சகலவிதமான கழிவுப்பொருட்களும் அகற்றப்பட்டதோடு,மன்னார் நகர சபையின் கழிவு அகற்றும் வாகனங்களில் அவற்றை சேகரித்தனர்.

குறித்த நிகழ்வில் மன்னார் நகர சபையின் செயலாளர், கிராம அலுவலகர்கள் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 15 ஆம் திகதி தொடக்கம்எதிர்வரும் 22 ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப்பகுதி கரையோர பாதுகாப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கடற்கரைகள் மற்றும் கடல் சார் சூழலை தூய்மைப் படுத்தும் சுமார் நூறு செயற்றிட்டங்கள் நாட்டைச் சூழவுள்ள சுமார் 14 கரையோர மாவட்டங்களில் கடல் சார் சூழல்அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)

# கைகள்,கால்கள் கட்டப்பட்ட நிலையில் மீண்டும் மூன்று மனித எலும்புக்கூடுகள் அடையாளம்

(மன்னார்)



மன்னார் சதொச வளாகத்தில் தொடர்ச்சியாக பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகழ்வுப்பணியின் போது கைகள், கால்கள் கட்டப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய மூன்றுக்கு மேற்பட்ட மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த அகழ்வுப் பணியின்போது கைகள்,கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய மனித எச்சம் ஒன்று அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

அந்த மனித எச்சம் அப்புறப்படுத்தப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக வெளிவரும் மனித எச்சங்கள் பயத்தை தோற்றுவிக்கும் வகையில் மிகவும் கொடூரமாகக் காணப்படுகின்றது. மீட்கப்படும் மனித எச்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொறு நிலையில் கொத்துக் கொத்தாக புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.தொடரும் அகழ்வுப் பணிகளின் போதும் மனித எச்சங்கள் மீட்கப்படலாம் என தெரிகின்றது.

எனவே அகழ்வுப் பணிகளை விரைவுபடுத்தும்வகையில் மேலதிகமாக சட்ட வைத்திய அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பாடசாலை முன்பாக மஞ்சள்கோடு இன்மையால் மாணவர்கள் விபத்துக்களை எதிர்கொள்கின்றனர்

## பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறு அதிபர் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

வவுனியா குடியிருப்பு பகுதியிலுள்ள இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலையில் பாடசாலை ஆரம்பிக்கும்போதும் பாடசாலை முடிவடையும்போதும் அவ்வீதியூடாகச் செல்லும் பேருந்துச் சேவையைக்கட்டுப்படுத்தி மாணவர்களுக்கு பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் ஆர்.நவரட்ணம் கோரியுள்ளார். இது குறித்து பாடசாலையின் அதிபர் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னரும் பாடசாலை முடிவடையும் பின்னரும் அவ்வீதியூடான போக்குவரத்தில் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் பயணிக்கின்றன. தனியார் பேருந்து, இ.போ.ச. பேருந்து உரிமையாளர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இதனால் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே இவ்விடயத்தில்பொலிஸார் தலையிட்டு உரிய நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலைக்கு முன்பாக மஞ்சள்கோடு அமைக்கப்படவில்லை. எனவே இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் வீதியூடாகவே பயணத்தை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகின்றது. இதனால் அண்மைய காலங்களில் மாணவர்கள் சிலர் குறித்த பகுதியில் விபத்துக்களையும் எதிர்நோக்கியுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# காணிகளை விரைவாக பெற்றுத்தரக்கோரி மனிதவுரிமை ஆணைக்குழுவில் மனு கையளிப்பு

(மன்னார்)

வடகிழக்கு காணி நிர்வாக திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டு 12 வருடங்கள் கடந்தும் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணி வழங்கப்படவில்லை என்பதன் அடிப்படையில் மன்னார் தேவன்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 53 பேர் தங்களுக்கு இதுவரை விவசாயக் காணிகளை வழங்கவில்லை என கோரி பல்வேறு தடவைகள் மாந்தை பிரதேச செயலகத்தில் கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் உரிய பதில் வழங்கப்படாத நிலையில் தேவன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் மன்னார் மாவட்ட மனித உரிமை ஆணைக் குழுவின் உப காரியாலயத்தில் நேற்று முன்தினம் புகார் மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

இதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு 53 நபர்களுக்கு பாலி ஆறு மற்றும் வெள்ளாங்குளம் அருகே அமைந்துள்ள காணிகளை வழங்கக் கோரி வடகிழக்கு காணி நிர்வாகத் திணைக்களத்தினால் பெயர் விபரங்கள் அடங்கிய அனுமதி வழங்கப்பட்ட போதிலும் 12 வருடங்கள் கடந்தும் இதுவரை மாந்தை பிரதேச செயலகத்தினால் தங்களுக்கு எந்த வித காணிகளும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கின்றனர். இதுவரை எழுத்து பூர்வமான பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

தற்போது தாங்கள் வாழ்வாதாரத்திற்கு சிரமப்படுவதாகவும் தங்களுக்கு வழங்க தீர்மானித்திருந்த காணிகளை விரைவாக பெற்றுத்தர உதவி கோரியும் மன்னார் மனிதவுரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் புகார் மனு ஒன்றை அளித்துள்ளனர். (2)

### பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

கிளி/கோணாவில் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2)

# நூல் வெளியீட்டு விழா

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக மாணவி தே.சுரேக்காவின் "மழை தருமோ என் தேசம்" நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா, இறம்பைக்குளம் மறைக்கோட்ட நடுநிலையத்தில் மன்னார் மறை மாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழ மற்றும் மன்னார் பத்திரிகை ஆசிரியருமான அருட்பணி லக்ஸ்ரன் டி சில்வா தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மெய்யியல், உளவியல் துறை கலாநிதி. க.கஜவிந்தன் கலந்து கொள்வார். (இ-7)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2018-17.10.2018

## குடும்ப முன்னேற்றம் கூடும் நேரம்!






ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருவும் சஞ்சரிக்கிறார். எனவே முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்க வாய்ப்புகள் கைகூடி வரும். குறிப்பாக உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். அதைக் கண்டு மேலதிகாரிகள் உங்களுக்கு கூடுதல் பொறுப்புக்களை வழங்கலாம்.

ஏழரைச் சனி விலகிவிட்டது என்றாலும், ஜென்ம குருவின் ஆதிக்கம் இருப்பதால் நீங்கள் எடுக்கும் முடிவுகளை கொஞ்சம் யோசித்து எடுப்பது தான் நல்லது. உடல் நலனில் அடிக்கடி சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். ஜென்மகுருவின் காரணமாக பயணங்கள் அதிகரிக்கும். எனவே குறித்த நேரத்தில் உணவருந்த இயலாது. அதன் விளைவாக ஆரோக்கியத் தொல்லை உருவாகும்.

தன சப்தமாதிபதியான செவ்வாய் உச்சம் பெற்றிருப்பதால் பொருளாதார முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். கூட்டுத் தொழிலை தனித் தொழிலாக மாற்ற எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகத்தை காணப் போகிறீர்கள்.

மாபெரும் கிரகமான குரு பகவான் உங்கள் இராசியில் இருந்து 2 ஆம் இடத்திற்கு செல்லவிருக்கிறார். ஜென்ம குரு விலகுவதும் நன்மைதான். கடந்த ஓராண்டாக ஏற்பட்ட மனக்கவலைக்கு இப்பொழுது விடை கிடைக்கப் போகிறது. குருப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே உங்கள் ஜாதகத்தில் குரு இருக்கும் சாரபலமறிந்து அதற்கேற்ற ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதோடு, ராகு கேதுக்களுக்கு பிரீதி செய்வதன் மூலம் ஆரோக்கியமும் சீராகும். ஆதாயமும் கிடைக்கும்.

### துலாம் இராசியில் புதன்

மாதத் தொடக்கத்தில் கன்னி இராசியில் உச்சம் பெற்று சஞ்சரித்து வரும் புதன், ஒக்டோபர் 2 ஆம் திகதி துலாம் இராசிக்குச் செல்கிறார். புதன் வலிமை இழந்திருந்தாலும் புதன் சுக்கிரன் யோகம் இருப்பதால் மிகுந்த நன்மையைக் கொடுக்கும். ஒக்டோபர் 4 ஆம் திகதி புதன் வலிமை அடைகிறார். அதன்பிறகு எல்லாம் நன்மையே நடைபெறும். உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துகொள்வீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் நட்பு கிடைக்கும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது, பெரும் இலாபத்தை உங்களுக்குக் கொடுக்கலாம்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

மாத தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் குரு பகவான், ஒக்டோபர் 4 ஆம் திகதி வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் 2 ஆம் இடத்தைப் பலப்படுத்துகிறார். எனவே கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். வீடு வாங்கும் யோகம் உண்டு. குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் உத்தியோகம், தொழில் சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சிகள் கைகூடும். வராத சம்பளப் பாக்கிகள் வந்து சேரலாம்.

### சுக்கிரனின் வக்கிர இயக்கம்

இக்காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனமுடன் இருப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களின் பாசமும், கூட்டாளிகளின் நேசமும் குறையலாம். மருத்துவச் செலவுகள் அதிகரித்து மனக்கலக்கம் கொடுக்கும். விலை உயர்ந்த பொருட்களை விற்கும் நிலை உருவாகலாம். குறிப்பாக பணநெருக்கடி கூடும் நேரமிது. எதையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு இருப்பதால், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு முன்னேற்றம் காண்பீர்கள். உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

இம்மாதம் நவராத்திரி விழாவைக் கொண்டாடுங்கள். அன்னை பராசக்தியை வழிபடுவதன் மூலம் எண்ணங்கள் நிறைவேறும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

நிதானத்துடன் செயற்பட வேண்டிய மாதம் இது. மாதத் தொடக்கத்தில் குரு பலம் மேலோங்கி இருப்பதால் குடும்பப் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வாரிசுகளால் தொல்லைகள் ஏற்படலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. ஒரு சில பொருட்களை மறதியாக இடம்மாற்றி வைத்து விட்டு, பிறகு தேடும் சூழ்நிலை ஏற்படும். சகோதர வர்க்கத்தினர் உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற விதத்தில் நடந்து கொள்வார்கள். சொத்துகளால் இலாபமும், சொந்த பந்தங்களால் நன்மையும் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு குருப்பெயர்ச்சிக்குப் பிறகு எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு சில சலுகைகளும் வந்துசேரும். வீடு கட்டவும், வாகனம் வாங்கவும் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கையை வழிபட்டு துயரங்களை போக்கிக் கொள்ளுங்கள்.

## நல்ல நேரம் வந்தாச்சு!






விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகி விட்டார். மேலும் உச்சம்பெற்று வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். பணிபுரியும் இடத்தில் உங்களுக்கு பாராட்டுக்கள் குவியும். பணவரவு இருமடங்காக உயரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்கும் விதத்தில் கிரகங்கள் சாதகமாக விளங்குகின்றன.

இலாபாதிபதியாக விளங்கும் புதன் உச்சம் பெற்றிருக்கிறார். அவரோடு தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்திருக்கிறார். எனவே தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் உருவாகும். நண்பர்கள் உங்கள் முயற்சிக்கு உறு துணையாக இருப்பர். தேவையான மூலதனத்தைப் போட்டுத் தொழிலைப் பெருக்க நினைப்பவர்களுக்கு வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். வசதிமிக்கவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வங்கிகளின் மூலமும் அனுகூலம் கிடைக்கும்.

இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றிருப்பதால் யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும்.

இம்மாதம் நடைபெறும் மாபெரும் குருப்பெயர்ச்சி நிகழ்வு உங்கள் இலட்சியங்களை நிறைவேற்றப் போகின்றது. குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே, உங்களுக்கு யோக பலம் பெற்ற நாளில் தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது. துர்க்கை வழிபாடும் நன்மையை வழங்கும்.

### துலாம் இராசியில் புதன்

மாத தொடக்கத்தில் கன்னி இராசியின் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் புதன், ஒக்டோபர் 2 ஆம் திகதி துலாம் இராசிக்கு வருகிறார். ஒக்டோபர் 4 ஆம் திகதி வலிமையடைகின்றார். அஷ்டம இலாபாதிபதியாக விளங்கும் புதன் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் தக்க தருணத்தில் கைகொடுத்து உதவுவர். வெளிநாட்டு வர்த்தகத்தில் ஆதாயம் அதிகரிக்கும். வீடுமாற்றம், இடமாற்றம், இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்தபடி அமையும். உத்தியோகத்தில் உயர் பதவிகள், உங்கள் திறமைக்கு பரிசாகக் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். உறவினர்கள் இல்லத் திருமணங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். உங்கள் ரசனைக்கேற்ப வாகனங்களை வாங்குவீர்கள்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 4 ஆம் திகதி குருப் பெயர்ச்சி நிகழ்கிறது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு, ஜென்ம இராசிக்கு வருகிறார். உங்கள் இராசிக்கு தனாதிபதியாகவும் பஞ்சம பாக்கியாதிபதியாகவும் விளங்குபவர் குருபகவான். அவர் ஜென்மத்திற்கு வரும்பொழுது செல்வநிலை உயர வழிபிறக்கும். செய்யும் செயல்களிலும் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். வீட்டில் மங்கல ஓசை கேட்கும் யோகம் உண்டு. மழலையின் ஓசை கேட்கும் வாய்ப்பும் ஏற்படும்.

குருபார்வையால் 5, 7, 9 ஆகிய இடங்கள் புனிதமடைவதால், அந்த ஸ்தானங்கள் அனைத்தும் புனிதமடைகின்றன. இனி வாழ்க்கையில் உங்களுக்கு வசந்த காலம் தான். குருவின் பலம் சிறப்பாக இருப்பதால், தொடர்ந்து வியாழக்கிழமை விரதமும், தட்சிணாமூர்த்தி வழிபாடும், அறுபத்து மூவர் ஆராதனையும் செய்து வருவது நல்லது. பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும் நேரமிது. விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவார்கள்.

### சுக்கிரனின் வக்கிர இயக்கம்

மாதத் தொடக்கத்தில் சுக்கிரன் அயன, சயன ஸ்தானத்தில் பலம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். ஒக்டோபர் 11 ஆம் திகதி சுக்கிரன் வக்கிர நிலையை அடைகின்றார். 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 12 இற்கு அதிபதி வக்கிரம் பெறும்பொழுது பயணங்கள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு நீண்டதூரப் பயணங்கள் கைகூடும். குறிப்பாக வெளிநாட்டு யோகங்கள் வந்து சேரலாம். புதிய வாகன சேர்க்கை உண்டு. திட்டமிட்ட காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றச் சிந்தனை ஏற்படும்.

இம்மாதம் கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகிய மூவரையும் நவராத்திரி நாட்களில் கொண்டாடி நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

உற்சாகமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் மாதமாகும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் இருமடங்காக உயரும்.


கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். தாய்வழி அதரவு திருப்திகரமாக இருக்கும். தங்கம், வெள்ளி போன்ற ஆபரண சேர்க்கை உண்டு. சொத்துகளை உங்கள் பெயரில் வாங்கும் யோகம் வாய்க்கும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவிக்கரம் நீட்டுவர். பணிபுரியும் பெண்களுக்கு இனி நல்ல நேரம்தான். உங்கள் திறமையைக் கண்டு உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கலாம். எல்லா நாட்களும், இனிய நாட்களாக அமைய குலதெய்வ வழிபாடும், பராசக்தி வழிபாடும் கை கொடுக்கும்.

(தொடரும்)

# யாழ். நூலகத்திற்கு 50 ஆயிரம் புத்தகங்கள்

## தமிழக அமைச்சர் செங்கோட்டையன் நேரில் வழங்கினார்






(யாழ்ப்பாணம்)

தமிழக அரசால்யாழ். பொது நூலகத்திற்கு ஐம்பதாயிரம் புத்தகங்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளன.

இப் புத்தகங்களை தமிழ்நாடு கல்வி அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் யாழ். மாநகர முதல்வர். இமானுவேல் ஆனோல்டிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வு ஜனாதிபதி, பிரதமர், மத்திய கல்வி அமைச்சர், வடமாகாண முதலமைச்சர் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோர் வழிகாட்டலின் கீழ் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று காலை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்திய தமிழ் நாட்டு அரசால் பொது நூலகத்துக்கு வழங்கப்பட்ட 50 ஆயிரம் புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வைத் தொடர்ந்து பாடசாலைகளுக்கான நூல் கொள்வனவிற்குரிய காசோலைகளை யாழ். இந்திய துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன். வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோர் பாடசாலைகளின் அதிபர்களிடம் வழங்கினர்.

இந்நிகழ்வில் விவசாய கமநல பிரதி அமைச்சர் அங்கஜன்இராமநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், மறவன் புலவு சச்சிதானந்தன், யாழ்.மாநகர ஆணையாளர் பொ.ஜெயசீலன், யாழ். பொது நூலக பிரதம நூலகர் சுகந்தி சதாசிவமூர்த்தி மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-9-101)

# உன்னத புருஷர்கள் உருவாக வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

உண்மையான தேசப்பற்றாளரான அநகாரிக தர்மபால போன்ற உன்னத புருஷர்கள் நாட்டில் உருவாக வேண்டும் என்பதே என்றும் மக்களது எதிர்பார்ப்பாக காணப்படுகின்றதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.




தேசப்பற்றாளரென கருதப்படும் சிலர் பொறுப்புக்களை கையளிக்கும் போது நடந்து கொள்ளும் விதம் தொடர்பில் எமக்கு அனுபவம் உள்ளதுடன், அநகாரிக தர்மபால போன்ற உன்னத தலைவர்கள் தேசப்பற்றினால் அன்று எழுப்பிய உண்மையான கோஷங்கள் அன்றும் இன்றும் என்றும் மக்கள் மனங்களில் உயிரோட்டத்துடன் காணப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற அநகாரிக தர்மபாலவின் 154ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அன்று நாட்டில் நிலவிய பிரச்சினைகள் தற்போதும் காணப்படுவதனால் அநகாரிக தர்மபாலவை போன்ற உத்தமர்களை நினைவூட்டுதலும் அவர்களை பற்றி அறிந்துகொள்ள முயற்சித்தலும் முன்னுதாரணமாக கொள்ளலும் அவசியமாகும் எனத் தெரிவித்தார்.

மிக மோசமான, நாட்டை சீரழிக்கும் சம்பவங்களின் போது தனது தாய்நாட்டிற்காகவும் மக்களின் எதிர்காலத்திற்காகவும் உருவாகிய கதாபாத்திரங்கள் எமது வரலாற்றில் ஏராளமாக காணப்படுவதுடன், முன்னுதாரணமாகவும் தொலைநோக்கு சிந்தனையுடனும் அவர்கள் பற்றிய செய்திகளை எதிர்கால தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்காக அவர்களை நினைவுகூருதல் எமது கடமையாகும்.

நேர்மையான சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்குடன் அநகாரிக தர்மபால அவர்களை முன்னுதாரணமாக சமூகமயப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி செயலகமும் புத்தசாசன அமைச்சும் இணைந்து இந்த வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தன.

நாட்டில் சுதந்திரம், பௌத்த கல்வி, பௌத்த பாடசாலைகள், பௌத்த அறநெறி கல்வி ஆகியவற்றின் ஆரம்பத்திற்கு முன்னோடியாக விளங்கிய தர்மபாலவின் தேசிய செயற்பணி தொடர்பாக தற்போதைய இளம் சமுதாயத்தினை தெளிவுபடுத்தும் அபிலாசையுடன் இந்த வைபவத்தில் பெருந்தொகையான பாடசாலை மாணவர்கள் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

ஜனாதிபதியினால் அநகாரிக தர்மபாலவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் வைபவம் ஆரம்பமானது. (இ-7)

# சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட உணவக உரிமையாளர்களுக்கு தண்டப்பணம்

(மல்லாவி )

மல்லாவி மற்றும் பாண்டியன் குளம் பொது சுகாதார பரிசோதகர்கள் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்களில்வெற்றிலை குதப்பியபடி சுகாதார விதிமுறைகளை மீறி உணவுப் பொருட்களை பரிமாறியமை மற்றும் உணவுப் பொருட்களை அச்சுத் தாள்களில் பொதிகள் செய்து விற்பனை செய்தமை உட்பட சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட உணவகங்கள் பொது சுகாதார பரிசோதகர்களின் திடீர் ஆய்வு நடவடிக்கையின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி செல்வநாயகம் - லெனின்குமார் முன்னிலையில் முற்படுத்திய போது உணவக உரிமையாளர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஏற்றுக் கொண்டதை அடுத்து 33, ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக மல்லாவி மற்றும் பாண்டியன் குளம் பிரதேசங்களின் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த வழக்கு விசாரணைகள் கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் அமர்வுகள் நடைபெற்ற போதே நீதிபதியினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

பாண்டியன்குளம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள நட்டாங்கண்டல் கிராம உணவகம் ஒன்றில் பணியாளர்கள் வெற்றிலை.பாக்கு குதப்பியபடி உணவுப் பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு பரிமாறியதுடன், அச்சடிக்கப்பட்ட தாள்களில் உணவுப் பொருட்களை பொதி செய்து வழங்கிய குற்றச்சாட்டுக்களையடுத்து உணவக உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் இனிவரும் காலங்களில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டால் உணவகத்தின் வியாபார உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இதேவேளை, மல்லாவி பொது சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் உற்பத்தி திகதி மற்றும் காலாவதி திகதி, தொகுதி இலக்கம், ஆகியவற்றை குறிப்பிடாத பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு 8, ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, மல்லாவி நகரப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் மருத்துவச் சான்றிதழ் பெறாத பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திய உணவக உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளார்கள். (2-15)

# ஏழு தமிழர்களின் விடுதலையில் மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும்

## தமிழக அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நம்பிக்கை



▲ முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்

▲ நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்



ராஜீவ்காந்தி குற்றவாளிகளின் விடுதலையில் மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும் என, தமிழக அமைச்சர் ஆர்.பீ.உத்யகுமார் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெல்லையில் செய்தியாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கு, ஆளுநர் சட்டப்படி விரைவில் பதில் அளிப்பார் என்றும், அது மகிழ்ச்சியான பதிலாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இவ்விடயத்தில் இதை விட அழுத்தம் வேறு எதனையும் வெளிப்படுத்த முடியாதெனவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை முதலமைச்சர் எடப்பாடி தலைமையிலான அரசாங்கம் ஒருநாள் கூட நீடிக்காதென கூறிய நிலையில் 17 மாதங்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீன எல்லையில் படைகள் குறைக்கப்படாது

## நிர்மலா சீதாராமன் உறுதி

(சென்னை)

சீன எல்லையில் படைகளை குறைக்கும் எண்ணம் இல்லை என மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"பிரதமர் மோடியும், சீன ஜனாதிபதி ஜின்பிங்கும் வூஹான் மாநாட்டில் ஒப்புக்கொண்டபடி, எல்லையில் அமைதியை நிலைநாட்டும் பணிகளில் இந்திய இராணுவம் ஈடுபட்டுள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் என்ற முறையில் இவ் விவகாரத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன். இந்த அமைதி நடவடிக்கைகள் பயன்தரும் என்ற நம்பிக்கை உள்ளது.

இருப்பினும் படைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற உணர்வு எனக்கு உண்டு. சீன எல்லையில் படை குறைக்கும் எண்ணம் இல்லை.

இந்திய - சீன எல்லையில், எல்லையை நிர்ணயிக்காத பகுதிகள் அதிகம் உள்ளன.

எனவே அங்கு எல்லை பிரச்சினை உருவாகுவது அடிக்கடி நிகழ்கிறது. மேற்கு, வடக்கு என்ற பேதமின்றி எல்லையில் கண்காணிப்புடன் இருக்க வேண்டும்.



கடல் எல்லை குறித்தும் எச்சரிக்கையாக உள்ளேன் என தெரிவித்துள்ளார்.(இ-7)

# பண மதிப்பு நடவடிக்கையே மோடி அரசின் மிகப்பெரிய ஊழல்

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட பணமதிப்பு நடவடிக்கையினால் பணக்காரர்களின் கறுப்பு பணம் வெள்ளைப் பணமாக மாற்றப்பட்டுள்ளதென காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

"பணமதிப்பு நடவடிக்கையே மோடி அரசின் மிகப்பெரிய ஊழலாகும். இதனூடாக பணக்காரர்களே அதிகளவான சலுகைகளையும் வாய்ப்புக்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அதாவது அவர்களுக்கு தவறாக கிடைக்கப்பெற்ற பணங்களும், வெள்ளை பணங்களாக மாற்றி அவர்களை தவறுகளிலிருந்து மோடி அரசு பாதுகாத்துள்ளது.

மேலும் சிறு வியாபாரிகளின் பணங்களை பறித்து பணக்காரர்களுக்கு வழங்குவதே இந்த பண மதிப்பு திட்டத்தின் நோக்கமாகும்.

அந்தவகையில் பெரிய 15 நிறுவனங்களின் ஒன்றரை இலட்சம் கோடி இந்திய ரூபாய் வாராக்கடனை மோடி அரசு இரத்து செய்தது. ஆனால் 5 ஆயிரம் இந்திய ரூபாவை கடன் வாங்கிய விவசாயிகளின் கடனை ஏன் இரத்து செய்யவில்லை.

ஆகையால் காங்கிரஸ் ஆட்சிக்கு வரும்போது, விவசாயிகளின் ஒட்டுமொத்த கடன்களும் இரத்து செய்யப்பட்டுஅவர்களுக்குவேண்டிய தேவைகளும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்" என ராகுல் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# நைஜீரியாவி

# 100 பேர்



(அபுஜா)

அமெரிக்கா, பிலிப்பைன்சை தொடர்ந்து நைஜீரியா நாட்டில் பெய்த கனமழைக்கு 100 பேர் பலியாகி உள்ளனர் என பேரிடர் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியா நாட்டில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையால் நைஜீரியா

# மலேசிய விமானத்தை சுட்

## உறுதியாகக் கூறும் ரஷ்யா

மலேசிய விமானம் கடந்த 2014ஆம் ஆண்டு கிழக்கு உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்டது உக்ரைன் இராணுவத்தின் ஏவுகணை மூலமாகவே என ரஷ்யா மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இவ் விடயம் குறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மலேசியாவிற்கு சொந்தமான எம்.எச்.17 என்ற விமானம் கடந்த 2014ஆம் ஆண்டு ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பியூகே ரக ஏவுகணை மூலமே சுட்டு வீழ்த்தப்பட்டது.

எனினும் அந்த ஏவுகணை உக்ரைன் இராணுவத்தால் ஏவப்பட்டது என்று தொடர்ந்து கூறி வருகிறோம்.

இதை உறுதிப்படுத்தும்



வகையில் தாக்குதலுக்கு பயன்படுத்தப் ஏவுகணையின் வரிசை எண்ணை வெளி டுகிறோம்.

எம்.எச்.17 விமானத்தை சுட்டு வீழ்த்திய 886847379 என்ற வரிசை எண் கொ ஏவுகணையாகும்.

சோவியத் யூனியனின் ஓர் பகுதிய உக்ரைன் இருந்தபோது குறித்த ஏவுகணை கடந்த 1986ஆம் ஆண்டு அப் பகுதிக்கு ரயி மூலம் கொண்டு செல்லப்பட்டது.

பியூகே வான் பாதுகாப்புத் தளத்தி

# வடகொரியாவுக்கு விஜயம் செய்
# தென்கொரிய ஜனாதிபதிக்கு வரவேற்



தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் வட கொரியாவுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் பியாங்யாங் சுனான் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய அவருக்கு ஜனாதிபதி கிம் ஜா உன் விசேட வரவேற்பளித்துள்ளார்.

கிம்முடனான மூன்றவது கட்ட சந்திப்பி ஈடுபடும் நோக்கில் நேற்று செவ்வாய் கிழமை காலை மூன் வடகொரியாவை சென்றடைந்தார்.

கடந்த மாதம் அமெரிக்க இராஜாங செயலாளரின் வடகொரிய விஜயத்தை இரத் செய்த பின்னர், தென்கொரிய ஜனாதிப மூன் ஜே-இன்னை தலைமை மத்திய தராக செயற்படும்படி ட்ரம்ப் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-

# ில் கனமழை உயிரிழப்பு !



விலுள்ள 10 இற்கும் மேற்பட்ட மாகாணங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

அங்குள்ள கோகி, நைஜர், அனம்ப்ரா மற்றும் டெல்டா ஆகிய மாகாணங்களை பேரிடர் மாகாண ங்களாக அந்நாட்டு பேரிடர் மீட்புக் குழு அறிவித்துள்ளது.

தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் அந்த மாகாணங்களில் நிவாரண மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. வெள்ளம் வடிந்ததும் விரைவில் மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும். (இ-7)

# டு வீழ்த்தியது உக்ரைன் இராணுவம்

பயன்படுத்துவதற்கான அந்த ஏவுகணை உக்ரைன் பகுதியிலிருந்த சோவியத் இராணுவத்தின் 20152 படைப்பிரிவிற்காக அனுப்பப்பட்டது.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து உக்ரைன் தனி நாடாக ஆன பிறகு குறித்த ஏவுகணை ரஷ்யாவிற்கு மீள எடுத்துவரப்படவில்லை.

உக்ரைன் இராணுவம் ஏவுகணையை வைத்துக் கொண்டது.

இவ் விவகாரம் தொடர்பாக விசாரணை செய்து வரும் நெதர்லாந்து அரசிற்கு இவ் ஆதாரத்தை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அதிகளவில் போதை; ஏழு பேர் உயிரிழப்பு

(ஹனோய்)

வியட்நாமில் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அதிகளவில் போதை மருந்து உட்கொண்ட 7 பேர் பலியான நிலையில் மேலும் 5 பேர் கோமாவில் உள்ளனர்.

வியட்நாம் தலைநகர் ஹனோயில் தொடர் இசை நிகழ்ச்சி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பலர் திடீரென மயங்கி விழ அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதிகளவில் போதை மருந்து உட்கொண்டதன் காரணமாக அவர்கள் மயங்கியதாகக் கூறப்பட்டது.

சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி 7 பேர் உயிரிழந்தனர். 5 பேர் சுயநினைவு இன்றி கோமாவில் உள்ளனர்.

இதனை அடுத்து இசை நிகழ்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# பாகிஸ்தான் ஒருபோதும் மாறாது

## ராஜ்நாத் சிங் கூறுகிறார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது நிலைப்பாட்டினை ஒருபோதும் மாற்றிக்கொள்ளாதென மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காஷ்மீர்- ஜம்முவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

“தற்போது பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான ஆட்சி நடைபெறுகின்றது. இதனால் இந்தியா- பாகிஸ்தானுக்கு இடையிலான பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் குறித்த கருத்துக்கு ஏற்ற எந்தவொரு புதிய மாற்றமும் பாகிஸ்தானில் தென்படவில்லை. அதாவது பிரதமர் நரேந்திர மோடி. மரபை மறந்து பாகிஸ்தானுக்கு சென்று அந்நாட்டு பிரதமரை சந்தித்தார்.

இருப்பினும் பாகிஸ்தான் எப்போதும் போல்தான் இருக்கிறது. அதனிடம் எந்த மாற்றமும் இல்லை. பாகிஸ்தான் எக்காலத்திலும் தமது நிலைப்பாட்டில் இருந்தும் மாறப்போவதில்லை. அத்துடன் அண்டை நாடு களுடன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக பாகிஸ்தான் முதலில் அறிந்துகொள்ள வேண்டும்” என ராஜ்நாத் சிங் தெரிவித்தார். (இ-7)

### வலுக்கும் வணிகப் போர்

# சீன இறக்குமதிப் பொருட்களுக்கு அமெரிக்கா மேலதிக வரி விதிப்பு



சுமார் 2,000 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள சீன இறக்குமதி பொருட்கள் மீது அமெரிக்கா மேலதிக வரிகளை விதித்துள்ளது. இதன்மூலம் அமெரிக்கா- சீனா இடையேயான வணிகப் போரை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ளது.

6,000 பொருட்கள்மீது இந்த மேலதிக இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே, நடந்துகொண்டிருக்கும் அமெரிக்க- சீன வணிகப் போரில் மிகப் பெரிய தாக்கமாக இது பார்க்கப்படுகிறது.

இலத்திரனியல் பொருட்கள், இணைய கருவிகள், தொலைத்தொடர்பு கருவிகள், குரல் மற்றும் தரவு பதிவு உபகரணங்கள், கைப்பைகள், அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்கள், கடலுணவு, புடைவைகள், கட்டடப் பொருட்கள் போன்றவை மேலதிக வரிவிதிப்புக்கு இலக்காகியுள்ளன. ஆனால், மேலதிக வரிவிதிப்புக்கு உள்ளாகும் என்று நம்பப்பட்ட, ஸ்மார்ட் கடிகாரம் போன்ற சில பொருட்கள் மேலதிக வரியில் இருந்து தப்பியுள்ளன.

அமெரிக்கா இனியும் இதுபோன்ற வரிவிதிப்பில் ஈடுபட்டால் தாமும் பதில் நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக சீனா முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த புதிய வரி விதிப்பு எதிர்வரும் 24 முதல் அமுல்படுத்தப்படும்.

தற்போது இறக்குமதி வரி விதிப்பு 10 சதவீதம் என்ற அளவில் கடைப்பிடிக்கப்படும். இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் எதுவும் எட்டப்படாவிட்டால், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இது 25 சதவீதமாக அதிகரிக்கும் சூழ்நிலை உள்ளது.

மானியங்கள் அளிப்பது, சில குறிப்பிட்ட துறைகளில் வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பங்குதாரர்களுடன் மட்டுமே செயற்பட முடியும் என்ற விதி போன்ற முறையற்ற வணிக நடைமுறைகளில் சீனா ஈடுபடுவதற்கு பதிலடியாகவே இந்த புதிய வரிகள் விதிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (இ-7)

# மேற்குலக நாடுகளுடன் முறுகல்; ரஷ்யா இரசாயனத் தாக்குதல் பயிற்சி



ரஷ்ய இராணுவம் வொஸ்டாக்-2018 முக்கிய இராணுவப் பயிற்சிகளின் ஒரு பகுதியாக இரசாயன தாக்குதல் பயிற்சியை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியுள்ளது.


ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள காணொலியொன்றில், படைவீரர் ஒருவர் இரசாயன பாதுகாப்பு அங்கிகள் மற்றும் முகமூடியை அணிந்த வண்ணம் உள்ளார். அவர் இரசாயன தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கவச வாகனங்களை சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளமை அந்த காணொலியில் சித்திரிக்கப்படுகின்றது.

சீனாவின் எல்லைப் பகுதியான கிழக்கு சேர்பியாவில் முன்னெடுக்கப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளின் போது சுமார் 3 லட்சம் ரஷ்ய துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டன.

மேற்குலக நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான முறுகல் நிலை வலுத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட யுத்த விமானங்கள் 36 ஆயிரம் தாங்கிகள் என்பன இராணுவ பயிற்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# வைத்தியசாலைப்பெட்டிகளில் குழந்தைகளின் சடலங்கள்

## கென்யாவில் பரபரப்பு



கென்யாவிலுள்ள பும்வானிஎன்ற வைத்தியசாலை பெட்டியொன்றில் குழந்தைகளின் சடலங்கள் அடைத்து ல்வைக்கப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கென்யாவின் நைரோபி தொகுதி ஆளுநர் மைக் சோன்கோ, வைத்தியாலை ஒன்றை திடீரென சோதனையிட்ட போது 12 குழந்தைகளின் சடலங் கள் பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறிந்துள்ளார்.

இது தொடர்பாக கென்யாவின் தலை நகரில் அமைந்துள்ள வைத்தியசாலையின் நிர்வாகக் குழுவை ஆளுநர் தற்காலிகப் பதவி நீக்கம் செய்துள்ளதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

பும்வானி குழந்தைகள் வைத்தியசாலையில், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி, தரமான சுகாதார பராமரிப்பு அங்கு வழங்கப்படும் நோக்கில் பராமரிப்பு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வியன்னாவுக்கான தூதுவரை திடீரென திருப்பி அழைத்தது ஏன்?

## ஜனாதிபதி மைத்திரி விளக்கம்



(கொழும்பு)

வியன்னாவுக்கான இலங்கைத் தூதுவர் மற்றும் அதிகாரிகளை திருப்பி அழைக்க உத்தரவிட்டமைக்கான காரணத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த ஓசோன் தின நிகழ்வில் உரையாற்றிய போதே, வியன்னாவில் இருந்து இலங்கைத் தூதுவர் பிரியானி விஜேசேகர மற்றும் ஐந்து அதிகாரிகளை நாடு திரும்ப உத்தரவிட்டமைக்கான காரணத்தை வெளியிட்டார்.

"வியன்னாவில் இருந்த எமது தூதுவருடன் அதிகார பூர்வ விடயம் சம்பந்தமாக பேசவேண்டியிருந்தது. எனது தொடர்பாடல் குழு, அவருடன் தொடர்பை ஏற்படுத்த நான்கரை மணி நேரம் முயன்றது.

தூதரகத்தில் இருந்த ஆறு தொலைபேசிகளுக்கு அழைப்பை ஏற்படுத்திய போதும், பதில் இல்லை.

இந்த தூதரகமே, வேறு நான்கு ஐந்து நாடுகளுக்குமான பொறுப்பையும் கவனிக்கிறது.

ஆறு தொலைபேசி இணைப்புகளுக்கும் வரும் தொலைபேசி அழைப்புகளில் ஒன்றுக்கும் கூட அவர்கள் பதிலளிக்கவில்லை என்றால், அங்கு பணியாளர்கள் இல்லை என்றே அர்த்தம்.

அங்கிருந்து ஏனைய நாடுகளிலுள்ள பிரதிநிதிகள் எந்தத் தகவலையும் பெற முடியாது. அந்த முடிவை எடுப்பதற்கு இதுதான் காரணம்.

திருப்பி அழைக்கப்பட்டவர்கள், அடுத்த சில நாட்களில் நாடு திரும்புவார்கள்" என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியைக் கொல்லச் சதி; அரசியல் பின்னணியே காரணம்

## வாசுதேவ எம்.பி.மீண்டும் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதற்கு அரசியல் பின்னணியே காரணமாகும். அத்துடன் முறையான விசாரணை இடம்பெறுமா? என்ற சந்தேகமும் இருக்கின்றது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் கோத்தபாய ராஜபக்ஷவுக்குமிடையில் எவ்வாறான தொடர்புகள் இருக்கின்றன என்பது யாவரும் அறிந்த விடயம். அத்துடன் தற்போது இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் கருத்து வேறுபாடுகள் போன்றவற்றை தீர்ப்பதற்கு சிலவேளை, ஜனாதிபதிக்கு கோத்தபாய ராஜபக்ஷ ஆலோசனைகளை தெரிவிப்பவராகவும் இருக்கலாம்.

நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவே தெரிவாவார் என்று இந்தியா நம்புகின்றது. அதே போன்று சர்வதேச பொருளாதார சஞ்சிகை ஒன்றும் இதனை எதிர்வுகூறியுள்ளது. அதனால் தான் இந்தியா மகிந்த ராஜபக்ஷவை அழைத்து அவருக்கு அரச தலைவருக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை வழங்கியிருந்தது. அத்துடன் பல சர்வதேச நாடுகள் மகிந்த ராஜபக்ஷவை உத்தியோகபூர்வமற்ற அரச தலைவராக இப்போதே ஏற்றுக் கொண்டுள்ளன.

அதனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலைசெய்யும் சூழ்ச்சி தற்போது வெளியாகியுள்ளது. இந்த சதித்திட்டத்துக்கு அரசியல் பின்னணியே காரணமாகும். முறையான விசாரணை இடம்பெற்றால் அதன் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விவசாயத்தை ஊக்குவிக்க இலங்கை-இந்தியா இடையே குளிரூட்டல் களஞ்சியசாலைக்கான ஒப்பந்தம் கைச்சாத்து





(கொழும்பு)

300 மில்லியன் ரூபா இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் விவசாயத்துறையை ஊக்குவிப்பதற்காக தம்புள்ளையில் 5000 மெற்றிக் தொன் குளிரூட்டல் வசதி கொண்ட களஞ்சியசாலையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங்சந்து மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விடயங்களுக்கான அமைச்சின் செயலாளர் ருவான் சந்திராவிற்குமிடையில் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இந்த ஒப்பந்தமானது கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (இ-7)

# தொலைத்தொடர்பு கோபுரத்துக்கு எதிரான போராட்டம் கைவிடப்பட்டது



(களுதாவளை)

மட்டக்களப்பு, களுதாவளை பகுதியில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கும் பணியை இடைநிறுத்தக் கோரி அப்பிரதேச மக்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்திய கவனயீர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைக்கு இணங்க குறித்த தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கும் பணியை பொலிஸாரின் உதவியுடன் இடை நிறுத்தியுள்ளதாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் தெரிவித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

### எதையும் லைட்டாக எடுத்துக்கொள்கிறவரா நீங்கள்?

இது நல்ல இயல்புதான். தவறு என்று சொல்லவில்லை. இந்த மனநிலைதான் பரபரப்பு மிகுந்த இன்றைய வாழ்வை வெகுவாக இலகுவாக்குகிறது என்கிற வாதத்தையும் நான் ஏற்கிறேன். ஆனால் எல்லா நேரங்களிலும் இதுவே சிறந்த முடிவு என்பதை மட்டும் நான் ஏற்க மாட்டேன்.

நமக்கு ஏற்படக்கூடிய துன்பத்தை நாம் மிக லேசான விடயமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் நம் செயல்களின் மூலம் பிறருக்கு ஏற்படக்கூடிய நட்டத்தையும் மனக்கஷ்டத்தையும் அப்படி எடுத்துக்கொள்ளலாமா?

நாம் வாழ்வில் சாதிக்க வேண்டிய இலக்குகளையெல்லாம் ஓரங்கட்டி வைத்து விட்டு அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்க நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால் நம்மவர்களால் நமக்கென்று நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அப்படிச் செய்ய நமக்கு உரிமை இருக்கிறதா?

இல்லை அப்படிச் செய்தால் அது பொறுப்பற்ற செயல் என்று பெயராகி விடும்.

மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புத் தருகிறவர்கள் எதையும் லைட்டாக எடுத்துக்கொள்வதில்லை.

இந்தப் பொறுப்பின்மை தொடர்ந்தால் ‘‘ஐயோ ! அந்தாளை நம்பியா இந்த வேலையை ஒப்படைக்கிறாய்? கடைசியில் சிரிச்சுட்டு தூசி தட்டிட்டுப் போயிடுவாம்பா. அவனை நம்பி எதையும் ஒப்படைக்காதே சொல்லிட்டேன்’’ என்பது போன்ற விமர்சனங்கள் நம்மைச் சுற்றிப் பரவ ஆரம்பித்துவிடும்.

ஒரு விடயத்தைப் பற்றி எல்லையோடு கவலைப்படும் போதோ அல்லது அக்கறைப்படும் போதோதான் சிந்தனையானது திரும்பத் திரும்ப அதைப் பற்றியே வலம் வருகிறது. தூண்டிலில் சிக்கிக் கொண்ட மீன் சும்மாவா இருக்கிறது? இல்லை. துள்ளித் துள்ளித் தான் பார்க்கிறது. அதனால் அதற்குச் சற்றே வலி ஏற்படுகிறது என்றாலும் ஒரு சில தடவை சட்டென்று தண்ணீரில் விழுந்து தப்பித்து விடுகிறதல்லவா? அதைப்போல எடுத்துக் கொண்ட, ஒப்படைக்கப்பட்ட அல்லது திணிக்கப்பட்ட பணியைப் பற்றிய நினைப்பைத் துடைத்து எறிந்து விடாமல் அதைப் பற்றியே சிந்திக்கும் போது ஏதாவத ஒரு வழி தோன்றி விடுகிறது.

எனவே சட்டென்று அடுத்த நினைப்புக்கு மாறி விடாமல் சூழ்நிலைகளை அனுசரித்துச் சிந்தித்தால் எதையும் லைட்டாக எடுத்துக்கொள்ளும் மனோபவத்திலிருந்து விடுபட்டு விட முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

# ஜே.ஆரின் ஜனனதினம் அனுஷ்டிப்பு






(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் 112 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று முன்தினம் ஐ.தே.க. தலைமையகம் ஸ்ரீகொத்தாவக்கருகிலுள்ள தேசிய ஊழியர் சங்க தலைமையகத்தில் நடைபெற்றது.

கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அன்னாரின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர். (இ-7)

(கேலிச்சித்திரம்)




# நாட்டில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் வினைத்திறனுடன் மாற்றம் பெற வேண்டும்

## பணிப்பாளர் பியதிஸ்ஸ ரணசிங்க வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை செயற்றிறன் மிக்க வகையில் பயன்படுத்தும் பயனாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், இச்செயன்முறை இன்னமும் வினைத்திறனுடையதாக மாற்றப்பட வேண்டும் என தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியதிஸ்ஸ ரணசிங்க தெரிவித்தார்.

அத்துடன் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினைப் பொறுத்தவரையில் இரண்டு பிரதான தரப்பினர் உள்ளனர். அதில் தகவல் வழங்கும் பிரிவினர் தற்போது போதியளவில் அறிவூட்டப்பட்டுள்ளனர்.


எனினும் தகவல் கோரும் பிரிவினரிடம் போதுமான விழிப்புணர்வற்ற நிலையே காணப்படுகின்றது.

அவர்களை அறிவூட்டும் வேலைத் திட்டங்களை எதிர்வரும் காலங்களில் முன்னெடுப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச தகவல் அறியும் உரிமை தினம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆகும். அதனை முன்னிட்டு நிதி மற்றும்வெகுசன ஊடக அமைச்சு நாளை மறுதினம் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியை தகவல் அறியும் உரிமை வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பிலும், தகவல் அறியும் உரிமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டிய முறைமை தொடர்பிலும் விளக்கமளிக்கும் வகையில் நேற்று முன்தினம் ஜானகி ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த செயமைர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பாலத்திற்குள் விழுந்து லொறி விபத்து: அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய சாரதி



(வத்தளை)

வத்தளை, பள்ளியாவத்தை பகுதியிலுள்ள பாலத்திற்குள் லொறியொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் சிக்குண்ட லொறியின் சாரதி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளதுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-7)

# அன்பாக போற்றுகின்ற எம்.ஜி.ஆரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் பிரித்துப் பார்க்க மாட்டோம்

## சபாநாயகர் கரு உறுதி



(கண்டி)

நாம் மிக அன்பாக போற்றுகின்ற எம்.ஜி.ஆரை ஒரு பொக்கிஷமாக தமிழகத்திற்கு கொடுத்திருக்கின்றோம். நாங்கள் அவரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரித்துப் பார்க்க மாட்டோம் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 102 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் அவர் பிறந்த ஊரான கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தின் கல்வி அமைச்சர் செங்கோட்டையனின் இலங்கை விஜயமானது வரலாற்றில் இடம்பெறக்கூடிய ஒரு சிறப்பு நிகழ்வாக நான் அறிவிக்கின்றேன்.

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. அந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக எங்களது உறவுப்பாலத்தில் பல்வேறு மாற்றங்களும், தாக்கங்களும் ஏற்பட்டிருந்தன.

ஆனால் இப்போது நினைத்து பார்க்கின்றேன். அன்று அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படாமல் இருந்திருந்தால் இன்று நாங்கள் இருக்கின்ற நிலையை விட மிக சந்தோஷமாக இருந்திருக்கலாம்.

இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பாக ஏற்படுகின்ற பிரச்சினை அரச மட்டத்தில் நாங்கள் தீர்த்துக் கொள்ளலாம். கடலோர பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்ளலாம். இதனால் நாங்கள் புரிந்துகொள்ள வேண்டியது. மீனவர்களும் வாழ்க்கை போராட்டத்தில் தான் இருக்கின்றார்கள்.

ஆகவே இந்த மீனவ பிரச்சினையை மனிதநேய அடிப்படையில் நோக்கப்பட வேண்டும்.

மேலும் இலங்கை அரசு என்ற ரீதியிலும், உயர்மட்ட ரீதியான ஒரு குழுவினராக நாங்கள் தமிழ்நாட்டிற்கு சென்று தமிழகத்திலுடைய எல்லா தலைவர்களையும் பார்த்து எங்களுடைய நல்லெண்ண முயற்சிகளை வலுவடைய செய்வோம் எனவும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டு மாத காலத்திற்குள் கடனை செலுத்த வேண்டும்

## மின்சார சபைக்கு உத்தரவு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை வழங்க வேண்டியுள்ள கடனை இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு நிதி செலுத்தாத விவகாரம் தொடர்பாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த 15 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

மின் உற்பத்தி, மின் விநியோகம் என்பவற்றுக்காக வருடாந்தம் மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு நிதி செலுத்த வேண்டும்.

ஆனால், மின்சார சபை 2018ஆம் ஆண்டு, 19 கோடியே 20 இலட்சத்து 600 ரூபாய் வரிப்பணத்தை செலுத்த தவறியுள்ளதாக கூறியே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த கடன் தொகையை இரண்டு மாத காலத்திற்குள் திருப்பி செலுத்த வேண்டுமென நீதிமன்று உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீமெந்து பைக்கற்றுக்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் அமைக்கப்பட்டு வரும் வாரியப்பு அன்னதான மடம் புனரமைப்புப் பணிக்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் 27 பைக்கற் சீமெந்தினை தனது மாகாண சபை ஒதுக்கீட்டு நிதியிலிருந்து புனரமைப்புச் சபையிடம் நேற்று முன்தினம் வழங்கினார். (இ-7)



மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண

# கொழும்பில் பேச்சு இந்தியா இணக்கம்



(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பிலான அடுத்தகட்ட பேச்சுவார்த்தை வெகுவிரைவில் கொழும்பில் நடத்தப்படுமென மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தையை கொழும்பில் நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் அதற்கான நாள் குறிப்பது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் கலந்துரையாடி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை- இந்திய மீனவர் பேச்சுவார்த்தையை இம்மாதம் கொழும்பில் நடத்துவதற்காக மூன்றாம் வாரத்தில் இரண்டு நாட்கள் குறிக்கப்பட்டிருந்தபோதும் எனது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணம் காரணமாக அதனை ஒத்திவைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதனையடுத்து வெகு விரைவில் அப்பேச்சுவார்த்தையை கொழும்பில் நடத்துவதற்காக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நாட்களை கோரியிருக்கின்றோம். இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் அதற்கான திகதிகள் எமக்கு கிடைக்குமென நம்புகின்றேன் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ்மா அதிபர் பூஜிதவை பணி நீக்கம் செய்யக் கோரிக்கை

ஹெல உறுமய மனு





(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவை சேவையிலிருந்து நீக்குமாறும் விசாரணைகளைத் தாமதப்படுத்தி வருவதற் காக பொலிஸ் மா அதிபர் பூஜிதவை பணி நீக்கம் செய்யுமாறும் கோரி தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் நேற்று முன்தினம் மாலை பிவிதுரு ஹெல உறுமய கட்சி முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளது.

அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் சட்டத்தரணி துஷார திஸாநாயக்க, மடு மாதவ அரவிந்த உட்பட குழுவொன்றே இந்த முறைப்பாட்டை தாக்கல் செய்துள்ளது.

ஜனாதிபதி மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்ய சதி செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த முறைப்பாட்டை அக்குழு தாக்கல் செய்துள்ளது. (இ-7)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பேன்

## டான் பிரசாத் எச்சரிக்கை



(கொழும்பு)

இந்த நாட்டில் ஒரு துரோகி போன்று செயற்படும் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக தனது போராட்டத்தை எதிர்வரும் நாட்களில் தொடரவுள்ளதாக டான் பிரசாத் எச்சரித்துள்ளார்.

மஹாசோன் பலகாயவின் அமித் வீரசிங்கவின் மனைவியுடன் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் மனுவொன்றைத் தாக்கல் செய்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேபோன்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவையும் கைது செய்து அவர் தொடர்பில் உள்ள குற்றச்சாட்டுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் டான் பிரசாத் கேட்டுக் கொண்டார்.

டான் பிரசாத் என்பவர், ரோஹிஞ்ய முஸ்லிம் அகதிகளை கல்கிஸை வீட்டில் வைத்து அச்சுறுத்தியமை, கொழும்பில் கடந்த 2016. 11.03 ஆம் திகதியன்று தவஹித் ஜமாத் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை தற்கொலை தாக்குதல் நடத்தி விட்டு, தன்னையும் தீ வைத்து எரித்துக் கொள்ளுவேன் என அறிவித்திருந்தமை போன்றவற்றுக்காக பொலிஸாரினால் பல தடவைகள் கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 6 விதி எண் 2

சுக்கிரன் சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கருணை உள்ளமும், இரக்க சுபாவமும் உள்ளவர்கள். இவர்களின் மனநிலை அறிவது மிகவும் கடினம். எதிலும் முன்னெச்சரிக்கை உடையவர்கள். ஆராய்ச்சியில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். ஒரு பொருளைத் தீவிரமாக விரும்பி உடனே வெறுத்து விடுவார்கள். இவர்களின் பேச்சும், எழுத்தும் பொருளீட்டும். பொதுவாழ்வில் நாட்டம் இருக்கும். சமாதானப் பிரியர்கள். புகழை விரும்புவார்கள். பருத்த உடலும், ஓரளவு உயரமும் உடையவர்கள். கூரிய பார்வையுடைவர்கள். உடல் சதைப் பற்று நிரம்பிக் காணப்படும். மகிழ்ச்சியாக வாழவே விரும்புவார்கள்.

பிடிவாதம் இருந்தாலும் இளகிய மனமுடையவர்கள். தூய்மையை விரும்புவார்கள். தலையை அலங்கரிப்பதில் ஆர்வமுடையவர்கள். இவர்களின் மன நிலை ஒரு நிலையில் நில்லாமல் அடிக்கடிக் குழம்பிப் போவார்கள். எந்வொரு காரியத்தையும் பலமுறை யோசித்த பின்னரே ஒரு முடிவுக்கு வருவார்கள். ஒருபோதும் வாழ்க்கையில் வெறுப்படைந்து உலகத்தைத் திட்டவே மாட்டார்கள். தனது தனித்திறமையால் முன்னேறுவார்கள். வாதம் செய்வதிலும், குறுக்குக் கேள்விகள் கேட்பதிலும் வல்லவர்கள். சமாதானம செய்வதில் வல்லவர்கள்.

எடுத்த முயற்சியிலிருந்து பின்வாங்கவே மாட்டார்கள். முன்வைத்த காலை பின்வைக்க மாட் டார்கள். தோல்வியைக் கண் டுத் துவள மாட்டார்கள். செயல்களில் தீவிரம் இருக்கும். உலக வாழ்க்கையை உளமார அனுபவிப்பார்கள். சிர நேரத்தில் அசுரத் தன்மை காணப்படும். பொதுவாழ்வில் புகழ் சேரும். நல்ல பதவி வாய்க்கும். எந்தநேரமும் சிரித்த முகம் மாறாமல் காட்சியளிப்பார்கள். தனக்கு உதவிகள் செய்தவர்களை எளிதில் மறந்துவிடுவார்கள். நன்றியை நினைத்துப் பார்க்க மாட்டார்கள். புகழுக்காகவும் சுய கௌரவத்துக்காவும் நிறைய செலவுகள் செய்வார்கள். சுய விளம்பரத்திற்குப் பெரிதும் ஆசைப்படுவார்கள். கலை, சினிமா, நாடகம் போன்றவற்றில் மனமகிழ்ச்சி அடைவார்கள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், சுற்றுலாப் பிரதேசங்களை விரும்பிப் பார்ப்பார்கள். வீடு, வாகனம், பணிபுரியும் இடம் அனைத்தையும் அழகுடன் வைத்திருப்பார்கள். இயற்கையில் மனதைப் பறிகொடுப்பார்கள். மனதின் சக்திக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள். மனதில் புதுப்புதுக் கருத்துக்கள் உதயமாகும். மிகவும் கடினமாக உழைகக் கூடியவர்கள். தன் மீது அன்பு கொண்டவருக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்வார்கள். பார்க்க மிகவும் அமைதியாக இருப்பார்கள். எல்லோரிடமும் ஒத்துப் போகும் குணமுடையவர்கள். மற்றவர்களை மகிழ்விக்கும் குணமுடையவர்கள். உலக அனுபவம் அதிகமுள்ளவர்கள். சிலநேரம் தனிமையை அதிகம் விரும்புவார்கள். வைத்தியம் பலிதமாகும். பிறர் சொல்லைக் கேட்டு நடக்க மாட்டார்கள்.




குறுக்கு வாதம் செய்வார்கள். எதையும் சந்தேகக் கண்ணுடன் பார்ப்பார்கள். தன்னுடைய தவறைச் சுட்டிக்காட்டுபவர்களை வெறுப்பார்கள். பதவிகளை விரும்புவார்கள். தியானம் செய்தால் மனக்குழப்பம் அகலும். நல்ல வாழ்க்கைத் துணை அமையும். சூதாட்டங்களில் வெற்றி பெறுவார்கள். பசுமையான பொருட்களால் ஆதாயம் பெறுவார்கள். குருபக்தி அதிகம் உடையவர்கள் சுகவாசிகள். தீவிரமான உழைப்பாளிகள். ஆன்மீக வாதிகள். எக்காரியத்தையும் தானே முன்னின்று நடத்தவே ஆசைப்படுவார்கள். தனிமையில் தனக்குத்தானே பேசிக் கொண்டிருப்பார்கள். தனிமையில் ஆராய்ச்சி செய்வார்கள். எதையும் வேகமாக விரும்பி வேகமாக வெறுத்தும் விடுவார்கள். கற்பனையில் கரைபுரள்வார்கள். அருவி போலக் கற்பனைகள் வந்து கொண்டேயிருக்கும். புகழ்ச்சிக்கு மயங்கிப் பணத்தை தண்ணீர் போல செலவு செய்வார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

1,10,19,28,6,15,24,7, 16,25.

**துரதிர்ஷ்ட திகதிகள்**

9,18,27,3,12,21,30,8, 17,26.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம், பச்சை, வெளிர் பச்சை, வெள்ளை.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**

கறுப்பு, கோப்பி கலர், பாக்கு நிறம், இருண்ட நிறங்கள், ரோஸ், கத்தரிப்பூ நிறம்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

முத்து, மரகதம், சந்திர காந்தக்கல், அக்கோமரின், டெரிடாட், பெரில், டைகர்ஸ் ஐ, ஜேட்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

47



“அம் முயற்சியின் விளைவாகப் பராக்கிரமபாகு என்ற (இரண்டாம் பராக்கிரமபாகு) இளவரசன் 1236 இல் தம்பதெனியா என்ற இடத் தில் ஒரு புதிய இராசதானியை அமைத்து இலங்கை மன்னனாக முடிசூடிக் கொள்கின்றன்.இச் சம்பவத்துடன் இரண்டு மன்னர் நாட்டில் உரிமை கோரும் நிலை உருவாகியது.தன்னை இலங்கையின் உண்மையுள்ள மன்னனாகக் கருதிய பராக்கிரம பாகு, உரிமையற்றவன் எனக் கருதப்பட்ட மாகனை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையைப் பெற்றான். பொலநறுவையில் மாகனுக்கு உதவியாக இருந்த தமிழர்களையும் கேரளர்களையும் கொண்ட பெரும்படை பராக்கிரமபாகுவினால் தகர்க்கப்பட்டது”

இலங்கையின் வடபாகத்தில் தோன்றிப் பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் எனப் பெயர் பெறும் அரசின் வரலாற்றில் பரந்து விரிந்த தென்னாசிய வரலாற்றின் பின்னணியில் வைத்தே நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

அப்படிப் பார்க்கும்போது, வல்லரசுகள் வீழ்ச்சியடைந்த கால கட்டத்தில் வெவ்வேறு பிராந்தியங் களில் சிற்றரசுகள் போன்று இயங்கிய அதிகார அமைப்புகள் தனியாதிக்கம் பெற்றுத் தலைதூக்குவதையும் அவை ஒன்றுக்கொன்று ஆதிக்கப் பெருக்கத்துக்காகப் போராட்டங்களில் ஈடுபடுவதையும் வல்லரசு காலத்து வளங்களும் செல்வமும் சீரழிவதை ம் காணமுடியும்.

இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு அவர்களின் முன்னோர் ஈட்டிய சாதனைகளை ஒத்த முன்னேற்றங்களைப் பெறத் தவறுவதையும் கூடவே காணலாம். இதன் விளைவாக வெளியிலிருந்து வரும் வல்லரசுகள் இலகுவில் இச் சிற்றரசுகளை அடக்கித் தம் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதும் தவிர்க்க முடியாதவை.

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் பின்னர், இந்நிலையைப் பொதுப்பட தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் காணலாம். முன்பு வலுவுடன் விளங்கிய சோழப் பேரரசும், பொலநறுவை அரசும் வீழ்ச்சியுற, இலங்கையில் சிறிய அரசுகள் தோன்றி ஒன்றுடன் ஒன்று போராடியது போல, தமிழ்நாட்டிலும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் சிறிய அரசுகள் தோன்றித் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டன.

பழைய வம்சங்களுள் ஒன்றாகிய பாண்டிய வம்சம் ஓரளவு வலுப்பெற்றுச் சிறிது காலம் ஆதிக் கம் பெற்றிருந்தாலும், முன்னர் இருந்த சோழப்பேரரசுக்குச் சமமான வல்லரசு ஒன்றை உருவாக்கத் தவறிவிட்டது. இந்நிலையில் வெளியிலிருந்து முஸ்லிம் படையெடுப்பாளர் தமிழ்நாட்டைத் தாக்கினர். அவர்களைத் தொடர்ந்து விஜய நகரப்பேரரசு தமிழ்நாட்டை அடிமைப்படுத்தியது.

பழைய சோழ, பாண்டிய வம்சங்களும் பிற சிற்றரசுகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. ஆத்திரத்து நாயக்கர் தமிழ்நாட்டில் சிறிதுகாலம் ஆட்சி நடத்தியபின், சிதறுண்டு காணப்பட்ட தமிழ்நாடு இலகுவில் ஐரோப்பிய வல்லரசாகிய ஆங்கிலேயப் பேரரசின் வசமாகியது. இலங்கையில் பிளவுபட்டுக் காணப்பட்ட அரசுகள்மீது ஐரோப்பிய அரசுகள், முதலில் போர்த்துக்கீசரும் தொடர்ந்து ஒல்லாந்தரும், இறுதியாக ஆங்கிலேயரும் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்தினர்.

இலங்கையின் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பொலநறுவையை ஆட்சிப்பீடமாகக் கொண்டிருந்த அரசு மேலாதிக்கம் பெற்றிருந்தது.

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

சிங்கள வம்சத்தவர், தமிழ் வம்சத்தவர் மற்றும் கலிங்க வம்சத்தவர் ஆகியோர் ஆட்சி நடத்திய பின்னர் இந்த அரசு, பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தளர்வுற்று வீழ்ச்சியடைந்தது. வெகுவிரைவில் பொலநறுவை நகரமே கைவிடப்பட்டது. சிங்கள வம்சத்தைச் சேர்ந்தோர் இன்னோர் ஆட்சிப்பீடத்தை பொலநறுவைக்குத் தெற்கே தம்பதெனியாவில் அமைத்தனர்.

அதுவும் பல ஆண்டுகள் நிலைக்காது போக, படிப்படியாக தென்மேற்கு நோக்கி சிங்கள வம்சத்தவர்களுடைய ஆட்சிப் பீடம் நகர்த்தப்பட்டது. இந்த ஆதிக்கப் பீடத்திலும் ஆட்சி நடத்தியவர்கள் தம்மை இலங்கை மன்னர் எனக்கூறிக் கொண்டாலும், இலங்கைத் தீவின் பெரும் பாகத்தை இவர்கள் ஆளவில்லை.

பொலநறுவையிலிருந்து வெளியேறிய கடைசி கலிங்க வம்சத்து மன்னனும் தன் ஆதிக்க பீடத்தை வடக்கே நகர்த்திக் கொண்டான். படிப்படியாக வடக்கே நகர்த்தப்பட்ட இந்த ஆதிக்கபீடம் இறுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிறு வப்பட்டது.

அவ்வாறு வடக்கு நோக்கிச் சென்ற ஆதிக்கபீடத்தில் ஆட்சி புரிந்தோரும் தம்மை இலங்கை மன்னர் என்றேகூறிக்கொண்டனர். சுருங்கக்கூறின் இலங்கை அரசு என்று முன்பு இருந்த அரசு பிளவுபட்ட பிரிவுகளில் அரசாட்சி புரிந்தோர் ஒருவரையொருவர் அங்கீகரிக்காது தாமே உண்மையான இலங்கை அரசர் என உரிமை கோரிக் கொண்டனர். இதன் விளைவாக, வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் இவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர்.

சில சந்தர்ப்பங்களில் இவர்களைத் தமிழ்நாட்டிலிருந்து சிற்றரசர்களும் பேரரசர்களும் தாக்கினர். இலங்கையில் போர்த்துக்கீசர் ஆதிக்கம் பதினாறாம் நூற்றாண்டில் ஏற்படும் வரை இந்நிலை காணப்பட்டது.

பொலநறுவையில் ஆட்சி நடத்திய கலிங்க மன்னனாகிய நிஸ்ஸங்கமல்லன் 1196 இல் இறந்ததைத் தொடர்ந்து தென்னிந்தியாவிலிருந்து பல படையெடுப்புகள் தொடர்ந்தன. இவற்றால் பொலநறுவை அரசு பெரிதும் பாதிக்கப்பட்டது. ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்ற படையெடுப்புகளில் 1215 இல் கலிங்க தேசத்திலிருந்து மாகன் என்பவன் நடத்திய படையெடுப்பு முக்கியம் பெறுகின்றது. இவன் தென்னிந்தியாவிலிருந்து பெருந்தொகையான படையினரைத் திரட்டி வந்து வெற்றிகரமாகப் பொலநறுவையைக் கைப்பற்றினான்.

மாகன் பொலநறுவையைக் கைப்பற்றியதோடு அவ் அரசு அதன் வரலாற்றின் இறுதிக் கட்டத்தை அடைந்தது. அங்கு பெருமளவு அரசியல் குழப்பநிலை தோன்ற, சிங்கள வம்சத்தைச் சேர்ந்த சிலர் ஆதிக்கத்தைச் சிங்கள மக்கள் அதிகமாக வாழ்ந்த தென்பகுதியில் நிறுவ முயன்றனர்.

அம் முயற்சியின் விளைவாகப் பராக்கிரமபாகு என்ற (இரண்டாம் பராக்கிரமபாகு) இளவரசன் 1236 இல் தம்பதெனியா என்ற இடத்தில் ஒரு புதிய இராசதானியை அமைத்து இலங்கை மன்னனாக முடிசூடிக் கொள்கின்றன்.இச் சம்பவத்துடன் இரண்டு மன்னர் நாட்டில் உரிமை கோரும் நிலை உருவாகியது.

தன்னை இலங்கையின் உண்மையுள்ள மன்னனாகக் கருதிய பராக்கிரமபாகு, உரிமையற்றவன் எனக் கருதப்பட்ட மாகனை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையைப் பெற்றான். பொலநறுவையில் மாகனுக்கு உதவியாக இருந்த தமிழர்களையும் கேரளர்களையும் கொண்ட பெரும் படை பராக்கிரமபாகுவினால் தகர்க்கப்பட்டது. பொலநறுவையிலிருந்து மாகன் அகற்றப்பட்டான்.

மாகன் பொலநறுவையை இழந்தாலும் வடக்கில் தனது அதிகாரத்தை இழக்கவில்லை என்றே தோன்றுகின்றது. இதனால் பொலநறுவை எந்த மன்னனுக்கும் பாதுகாப்பான இடமாக இருக்கவில்லை. இக் காரணத்தினால் பராக்கிரமபாகு பொலநறுவையிலிருந்து ஆட்சி நடத்த முடியவில்லை. போரில் மாகனை வெற்றி கொண்ட பின், தனது புதிய தலைநகராகிய தம்பதெனியாவுக்கு அவன் திரும்பிச் சென்று தன் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தினான்.

மாகன் தொடர்ந்து வடபகுதியில் தனது ஆட்சியை நடத்தினான். முதலில் மாகன் பதவியாவில் தனது ஆட்சியைப் பலப்படுத்தி பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அரசியல் செல்வாக்குப் பெற்று, அங்கு மன்னனாக இருந்திருக்க முடியும் எனத் தோன்றுகின்றது.


யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றி பதினேழாம் நூற்றாண்டின் பின் தமிழ் வரலாற்று நூல்களை எழுதிய புலவர்கள் மத்தியிலும், நவீனகால வரலாற்று ஆசிரியர்கள் மத்தியிலும் பல கருத்து வேறுபாடுகள் இருப்பதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாண அரசு வரலாற்றுக் காலத்திலிருந்து தொடர் ச்சியாக இருந்து வந்திருக்கின்ற தென்பது, இரண்டாவது அத்தியாயத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

# “ஈழத் தமிழர்கள் விடயத்தில் தமிழக அரசு தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள்



(கொழும்பு)

தமிழக அரசு இலங்கை தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளின் போது குரல் கொடுக்க வேண்டும், ஆதரவும் தர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் வாழும் அனைத்து தமிழ் மக்களுக்கும் தமிழ்நாடு ஒரு காவலன் என்று தான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் எமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உலக ரீதியான ஒரு ஆதரவையும் வழங்குகின்றது.

நாங்கள் இருக்கின்றோம் உங்களுக்காக என்று சொல்லுகின்றார்கள். இதனால் நாங்கள் நம்பிக்கையோடு இருக்கின்றோம்.

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விட்டுச் சென்ற பணிகளை மறைந்த தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எமக்கு தொடர்ந்தும் பணிகளை செய்து வந்தார். அவர் வழியில் இன்னும் எமக்கு பணிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன என்றார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 102 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் அவர் பிறந்த ஊரான இலங்கையில் கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கட்டண அதிகரிப்பு இறுதித் தீர்மானம் அமைச்சரவையில்



(கொழும்பு)

தனியார் பேருந்துச் சங்கங்கள் என்ன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டாலும் பேருந்துக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் அமைச்சரவையிலேயே எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் தனியார் பேருந்து கட்டணங்களை அதிகரிக்காவிடின் எதிர்வரும் 24 ஆம் திகதி நள்ளிரவு முதல் தனியார் பேருந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து சங்கங்களின் சம்மேளனம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இது குறித்து நேற்று முன்தினம் மாலை கருத்துத் தெரிவிக்கையிலேயே போக்குவரத்து அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது பேருந்து கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. எத்தனை ரூபாவினால் கட்டண அதிகரிப்பு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பில் அமைச்சரவைக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இன்று புதன்கிழமை போக்குவரத்து அமைச்சில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பலாலி விமான நிலைய அபிவிருத்தித்திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியில் இந்தியா

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தை, பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யவுள்ளதாக இந்தியாவின் விமான நிலைய அதிகார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய விமான நிலைய அதிகார சபைக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் உடன்பாடு ஒன்று அண்மையில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இதற்கமைய, பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான விரிவான திட்ட அறிக்கையை இந்திய விமான நிலைய அதிகாரசபை தயாரிக்கும்.



இதுதொடர்பான உடன்படிக்கையில், இந்திய விமான நிலைய அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனில் குப்தாவும், இந்திய வெளிவிவகார அமைச்சின் வங்காள விரிகுடா நாடுகளுக்கான இணைச் செயலர் சஞ்சய் பாண்டாவும் அண்மையில் கையெழுத்திட்டுள்ளனர்.

அனைத்து தொழில்நுட்ப மற்றும் காரணிகளையும் உள்ளடக்கியதாக இந்த விரிவான அறிக்கை தயாரிக்கப்படும் என்றும், 3 மாதங்களுக்குள் இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணி நிறைவடையும் என்றும் எதிர்பார்ப்பதாகவும், இந்திய விமான நிலைய அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய விமான நிலைய அதிகார சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில், விமான நிலைய அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான தமது ஆற்றலும், நிபுணத்துவமும், உலகளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளது. (இ-7)

# பொதுஅறிவுப் போட்டி பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட மகாஜனன் கணித பொது அறிவுப்போட்டி பரிசில் வழங்கல் நிகழ்வு நாளை மறுதினம் முற்பகல் 11 மணியளவில் மகாஜனக்கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறும் என மகாஜனக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

# மூன்று விபத்து; நால்வர் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மூன்று வெவ்வேறு விபத்து சம்பவங்களில் நால்வர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை ஆட்டோ ஒன்று தடம் புரண்டதில் சாரதியான எழுதுமட்டு வாழைச்சேர்ந்த (வயது-36) நபர் ஆட்டோக்குள் அகப்பட்டு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் ஏ32 கேரதீவுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் வீதியில் காணப்பட்ட அடையாள சமிக்ஞையில் மோதி காயமடைந்த நிலையிலும் மற்றும் சாவகச்சேரி நகர் பகுதியில் கடைக்கு முன்பாக நின்ற வடமராட்சியைச் சேர்ந்த (வயது-50) நபரொருவரை மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-30)

# ஜோன்ஸ்டனின் பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பிணை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவர் மீதும், சதொச நிறுவனத்திற்கு சொந்தமான அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் குற்றஞ் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நளீன் பெர்னாண்டோ மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பிரத்தியேக செயலாளர் மொஹமட் ஷாகிர் ஆகியோர் மீதே இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சார்பில் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த 09.09. 2018 ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் 65வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் மயங்கி கிடப்பதாக 1990 அவசர அம்புலன்ஸ் பிரிவுக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில் அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

முகவரி, பெயர் தெரியாத நிலையில் குறித்த நபர் வாய் பேச முடியாதவராகவும் காணப்படுகின்றார்.

அழுக்கடைந்த சேட், சரம் ஆகியவற்றுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் 5ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்ட குறித்த நபரை அடையாளம் காண உதவுமாறு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இவர் விடுதியில் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்கு எந்தக் காரணமும் இல்லை எனவும் இவரை பொறுப்பேற்க ஆவன செய்து தருமாறும் மேலும் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-30)



வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ பணி (நிலமெஹவர) ஜனாதிபதி மக்கள் சேவை இடம் பெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி விஜயகலா மகேஸ்வரன், மாவை.சேனாதிராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நட்சத்திர மூலிகையின் மருத்துவப் பண்புகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**மிருகசீரிடம் நட்சத்திரம் (கருங்காலி மரம்)**

செவ்வாயின் ஆதிக்கம் நிறைந்த நட்சத்திரம் மிருகசீரிடம். இவர்களுக்குரிய மரம் கருங்காலி. மருத்துவத்தில் நேரிடையாக பயன்படுத்துவது கிடையாது. ஆயினும் முக்கிய உப பொருளாகப் பயன்படுத்தப்படும் மரவகையாகும். எண்ணெய்ப்பசை மிகுந்து இருக்கும்.

இதன் பட்டை, பிசின், வேர் மருத்துவ குணமுடையவை. இதன் மரப்பட்டை வெள்ளை. பல வேர் நோய்கள், இருமல், ஈளை இவைகளை நீக்கும். கருங்கரப்பான், மேக நீரிழிவு, பெரும்பாடு ஆகியவற்றை இதன் பிசின்நீக்கும். மரவேர்ஆனது வயிற்றுப்புழு, நீரிழிவுநோய், நாக்கைப்பற்றி வரும் பெருநோய், குருதிக்கழிச்சல் ஆகியவற்றை நீக்கும். இதன் வேரூறிய நீரினால் பெரு நோய், அழல், குன்மம், பெரு வயிறு, வயிற்றுப் புழு நோய், குருதிக் குறைவால் வந்த திமிர், திமிர் வாதம், நீரிழிவு இவைகள் குணமடையும். வெண் கருங்காலி வேரினால் பெரு வயிறு, ஏறுபித்தம், நாக்கறுத்துப் போதல், கள்ளைப்போல் நீரிக்தல் இவை நீங்கும்.

**திருவாதிரை நட்சத்திரம் (செங்கரு மரம்)**

ராகுவின் நிறைவான ஆதிக்கம் பெற்ற நட்சத்திரமாகும். திருவாதிரை நட்சத்திரம் அன்பர்களுக்குரிய மரம் செங்கரு. இதன்பட்டை, இலை, பழம், விதை என எல்லாமே பயன்பாட்டில் உள்ளதுதான். இதன் பட்டை மிகவும் கசப்புத்தன்மை வாய்ந்தது. பிளவுபட்டுக் காணப்படும். காய்ந்த இலைகளை தேநீராகப் பயன்படுத்துவர். இதனுடைய பழம் காயாக இருக்கும்போது ஒருவித நெடியுடன் காணப்படும். இதன் பழத்தை மரத்தில் இருந்து பிடுங்கியவுடன் பயன்படுத்த வேண்டும். இதனை வயிற்றெரிச்சல், தோல்புண்,





சிறுநீர் உபாதை, வாய்ப்புண், மலச்சிக்கல் போன்றன தீரும். அத்தோடு இந்த பழம் ஜாம் போலத் தயாரிக்கவும் பயன்படுத்தலாம். உலர் பழமாக கடைகளில் இது விற்கப்படுகிறது.

**புனர்பூசம் நட்சத்திரம் (மூங்கில் மரம்)**

குருவின் பூரண பலம் பெற்ற நட்சத்திரம் புனர்பூசம். இவர்களுக்குரிய மரம் மூங்கில். மருத்துவத்தில் இதன் இளம் இலைகளையும் பச்சை மூங்கிலையும் விதைகளையும் பயன்படுத்துவர். மூங்கில் நீரிழிவுக்கு, உப்பு நோய்க்கு, பித்த கபத்தைச் சமன் செய்ய, அல்சர், டயாரியா, பொதுவான உற்சாக குறைவுக்கு, சதை தளர்வுக்கு, Thread-Worm இற்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மூங்கிலானது மருத்துவ குணம் மிகுந்தது. இதில் 96.9% சிலிக்கன்டை ஒக்சைட், நுண்ணிய இரும்பு, கல்சியம், அலுமினியம்போன்ற காரப்பொருட்கள் உள்ளன. மூங்கிலிலிருந்து எடுக்கப்படும் மூங்கிலரிசி மருத்துவ குணங்கள் நிறைந்தவை.

மூங்கில் இலைச்சாறு காடியம் காட்டிப்பூச இடுப்பு பிடிப்பு தீரும். இலைச்சாறும் தேனும் கலந்து தர இருமல் தீரும். இலைச்சாறும் சிருங்கிபற்பமும் சேர்த்து தர நெஞ்சுவலி குணமாகும். மூங்கில் குருத்தோடு உப்பு, மிளகு சேர்த்துத்தர கழிச்சல் குணமாகும். இவையால் வாதநோய்களும் மாதவிடாய் கோளாறுகளும் குணமாகும். மூங்கிலின் வேரிலும் மருத்துவ குணங்கள் காணப்படுகின்றன. வேரை அ்ரைத்து சொறி, சிரங்குகளுக்கு தடவ குணமாகும். இதைக் குடிநீரிட்டு குடிக்க சுரவெப்பம் தணியும். மூங்கிலின் இள முனைகளை நசுக்கிப் பிழிந்து சாறெடுத்து அழுகல் புண்ணுக்கு பூசி பின்னர் அதைச் சிதைத்து வைத்துக் கட்ட அப் புண்களிலுள்ள பூச்சிகள் வெளியேறிவிடும், புண்ணும் ஆறும்.

**பூசம் நட்சத்திரம் (அரசமரம்)**

இருபத்து ஏழு நட்சத்திரங்களில் மிகச்சிறந்ததாகக் கருதப்படுவது பூசம். இவர்களுடைய மரம் மரங்களின் தலைவராக விளங்கும் அரசமரமாகும். இதன் உருவ அமைப்புப் போலவே இதன் மருந்து இதயத்திற்கும் ஹைபர் டென்சனுக்கும் அருமருந்து. மஞ்சள் காமாலை, மாலைக்கண், காதுநோய், இருமல், ஆஸ்துமா, கர்ப்பப்பை, விந்தணு சிக்கல்கள், மாதவிடாய்க் கோளாறு, சளி, தலைவலி போன்ற பலநோய் உபாதைகளுக்கு நிவாரணம் தருகிறது. பாம்பின் விச முறிவுக்கு பயன்படுகிறது.

இதன் மரப்பட்டைகளைச் சேகரித்து சிறிது சிறிதாக அரிந்து நிழலில் உலர்த்தி சாம்பலை தேங்காய் எண்ணெயுடன் தடவி வர சொறி, சிரங்கு குணமாகும். மேலும் இப்பொடியை சாம்பிராணியுடன் சேர்த்து புகைத்தால் தீங்கு செய்யும் நுண்ணுயிர்க்கிருமிகள் வீட்டில் தங்காது வெளியேறும். இதன் தளிர் இலைகளை அரைத்து கால் பித்தவெடிப்பிற்கு பூச குணமாகும். அரச மரத்தின் அடிப்பகுதியை கீறி கசியும் பாலை பாதங்களில் ஏற்படும் வெடிப்பிற்கு பூச வெடிப்பு மாறும்.

இலைக்கொழுந்து உடல் வன்மையைப் பெருக்கும். சுரத்தையும் முக்குற்றத்தையும் போக்கும். வித்தைத்தக்க அளவில் பொடிசெய்து உட்கொண்டுவர மலச்சிக்கல், குரல் வறட்டம் போகும். இம்மரத்தில் வளரும் புல்லுருவின் இலையை அரைத்துப் பிள்ளைப்பேறு இல்லாப்பெண்களுக்குளலுமிச்சம்பழம்அளவு மூன்று நூல் சூதகத்திற்கு முன்பு கொடுத்துவர சூல் அமையும்.

**ஆயிலியம் நட்சத்திரம் (புன்னை மரம்)**

சுருண்ட நிலையில் உள்ள பாம்பினை உருவகப்படுத்தும் நட்சத்திரம் ஆயிலியம். இந்த நட்சத்திரத்தின் அதிதேவதை சர்ப்பம். இவர்களுக்குரிய மரம் புன்னை. இதனைகிருஷ்ணமரம், காமினி மரம் என்று சொல்வர்.

இம்மரத்தின் விதைகள் தான் மிக அதிகமாக மருத்துவத்தில் பயன்படுகின்றன. பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சணக்கொல்லி, வலி நிவாரணி, மூளை சம்பந்தப்பட்ட நோய்க்கு, முடக்குவாதத்திற்கு, மூட்டுவலி, தோல் சம்பந்தமான அனைத்து உபாதைகளுக்கும் வெட்டுப்புள்ளிக் காயங்களுக்கும் மிக மிக அதிகமாகப் பயன்படுகிறது.

புன்னை இலைகளைச் சிறுகச் சிறுக அரிந்து வெள்ளுண்ணி, மிளகு தட்டிப் போட்டு பொட்டலமாகக் கட்டி ஆவியில் பிடித்து தாங்கக் கூடிய சூட்டுடன் வாத நோய்களில் ஒற்றடம் இட வேதனை தணியும். இலையையும் பூக்களையும் தண்ணீரில் ஊறப் போட்டு அந்நீரைக் கொண்டு சிரங்கு, சொறி முதலியவைகளைக் கழுவ அதை தீரும்.

விதைகளிலிருந்து எடுக்கப்படும்எண்ணெய் புன்னை எண்ணெய் எனப்படும். தற்காலத்தில் கணனி சம்பந்தப்பட்ட வேலைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுபவர்களுக்கு முக்கியமான பிரச்சினையாக 30-35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே முதுகுவலி, நாரிப்பிடிப்பு பொதுவாக ஏற்படுகின்றது. இப்படியான உபாதைக்கு உட்படுபவர்களுக்குபுன்னை எண்ணெயை உடம்பு முழுவதும் பூசி 20 நிமிட நேரம் ஊறவிட்டு உடலை 2 மணி நேர ஓய்வில் இருக்க விட மேற்கூறிய வலிகளுக்கு சிறந்த நிவாரணியாகும்.

அதேபோல்உடல்மெலிந்தவர்கள் உடலைப் பருமனடைய வேண்டும் என விரும்பினால் புன்னை எண்ணெயை உடம்பு முழுவதும் பூசி 20 நிமிட நேரம் ஊறவிட்டு பின் வெந்நீரில் நன்று குளித்து வர உடல் நன்கு புஷ்டியாகும். ஏனெனில் உடலிலுள்ள கலங்களையும் திசுக்களையும் நன்கு வளர்ச்சியடைக் கூடிய தன்மை இவ் எண்ணெய்க்கு உண்டு.

(தொடரும்)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

---

# “தோட்டத்தொழிலாளி 7 பேர்ச் காணியுடன் சொந்த வீட்டில் வாழக்கூடிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது”





(ஹற்றன்)

ஒரு அங்குல நிலம் கூட கொடுக்காத தோட்டத் தொழிலாளிக்கு 7 பேர்ச்சர்ஸ் காணியுடன் சொந்த தனி வீட்டில் வாழக்கூடிய சந்தர்ப்பத்தினை இந்த அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளதென மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் ஒன்பதரை இலட்சம் ரூபாவும் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சின் ஒரு வீட்டிற்கு இரண்டரை இலட்சம் ரூபா செலவிலும் மொத்தம் ஒரு வீட்டிற்கு 12 இலட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் அமைக்கப் படவுள்ள என்பீல்ட் தோட்டத்தில் ரூபாக்கொலை பிரிவில் 50 வீட்டிற்கான அடிகல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் மலையக சமூகத்தின் விடிவுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை செய்து வருகின்றேன். அந்த வேலைத் திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும்பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது.

ஒரு அங்குல நிலம் கூட கொடுக்காத தோட்டத் தொழிலாளிக்கு 7 பேர்ச்சர்ஸ் காணியுடன் சொந்த தனி வீட்டில் வாழக்கூடிய சந்தர்ப்பத்தினை இந்த அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. அதற்கு நாம் இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும்.

ஆனால் நான் என்ன தான் வேலை செய்தாலும் தேர்தல் காலங்களில் சோற்றுப்பார்சலையும் சாராயத்தையும் காட்டி மக்களை ஏமாற்றி விடுகிறார்கள். சோற்றுப்பார்சலுக்கும் சாராயத்துக்கும் சமூகத்தை மாற்றமுடியாது என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இன்று ஒரு சிலர் சொல்கிறார்கள் நான் கட்சி பார்த்துத்தான் வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளேன் என்று. ஆனால் இன்று இங்கு வந்துள்ள ஏனைய கட்சிக்காரர்களுக்குத் தெரியும் நான் அவ்வாறு செய்யவில்லை என்று. இதேநேரம் தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒபபந்தம் ஒக்டோபர் மாதம் நிறைவுபெறவுள்ளது.

இதிலும் தொழிற் சங்கங்கள், கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றத்தான் போகிறார்கள். அதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. தோட்டத்தொழிலாளர்கள் அடிப்படை சம்பளத்தை உயர்த்துவதற்காக கம்பனிகளுக்கு கையொப்பமிடும் தொழிற்சங்கங்களுக்கு ஆதரவாகவும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கட்சி பேதங்கள் அனைத் தையும் மறந்து அணிதிரள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது இந்திய அரசாங்கத்தினால் வழங்கிய 40 பேருந்துகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக விசாரணை செய்யுமாறு இந்திய உதவி தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு மத்திய மாகாண சபையின் உறுப்பினர் ராம், இந்திய கண்டி இந்திய தூதுவராலயத்தின் உதவி தூதுவர் திரேந்திர சிங் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# சிறுவர் அரங்கம்

## எல்லா உயிர்களுக்கும் உதவி செய்



ஒரு நாட்டு ராஜாவிடம் முத்தன் வேலை செய்து வந்தான். அந்த ராஜாவுக்கு மிருகங்கள், பறவைகள் பேசும் பாஷை தெரியும். முத்தனுக்கு ஒரே ஆச்சரியம். எப்படி ராஜா விலங்குகள் பேசுவதை அறிந்து கொள்கிறார் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. முத்தன் தான் அந்த ராஜாவுக்கு தினமும் உணவு கொண்டு கொடுப்பான். ராஜாவின் உணவில் ஒரு பகுதி மட்டும் தனியாக தனிப் பெட்டியில் ராணியே சமைத்துத் தருவாள்.

ஒரு நாள் முத்தன் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அந்த பெட்டிக்குள் ஏதோ துண்டு துண்களாக சமைத்து வைக்கப்பட்டிருந்தன. இது என்னவாக இருக்கும் என்று ஒரு துண்டை எடுத்து சாப்பிட்டுப் பார்க்கிறான். அதைச் சாப்பிட்டதும் முத்தனுக்கு பறவை, மிருகங்களின் பேசும் பாஷை புரிய ஆரம்பிக்கிறது. புதிய சக்தி கிடைத்ததும் அவன் அரண்மனையில் இருந்து அப்படியே புறப்பட்டு கிளம்பி விடுகிறான்.

அவன் குதிரையில் கிளம்பிச் செல்லும் வழியில் எறும்புகள் சாரை சாரையாக போவதை பார்த்தான். எறும்பின் தலைவன் இவனிடம் குதிரையை எறும்புகளை மிதிக்காத வண்ணம் செலுத்தும்படி வேண்டிக் கொண்டது. அவனும் அப்படியே செய்தான். எறும்புகள் நன்றி தெரிவித்து, என்றேனும் உங்களுக்கு உதவுவேன் என்று கூறியது.

அடுத்து, அவன் செல்லும் வழியில் குளம் இருந்தது. அங்கு மூன்று மீன்கள் அழும் குரல் கேட்டது. அவை புதருக்குள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன. குளத்தில் தாவிக் குதிக்கும் போது அவை தவறிப் புதரில் விழுந்திருந்தன.

அவற்றையும் காப்பாற்றி தண்ணீருக்குள் மீண்டும் எடுத்துவிட்டு கிளம்பினான். மீன்களும் நன்றி தெரிவித்தது.

அவன் கொஞ்சத் தூரம் ஒரு காட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான். சின்னஞ்சிறு காகங்களின் குரல் கேட்டது. தாய் காக்கை அவைகளிடம் "நீங்களே உங்கள் உணவைத் தேடிக் கொள்ளுங்கள்" என்று கூறி மரத்தில் இருந்து கீழே தள்ளி விட்டிருந்தது. அவைகளுக்கு தானியங்களை உணவாக கொடுத்துவிட்டு கிளம்பினான். அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றி கூறின.

அதன்பின் காட்டைக் கடந்து அவன் வேறு ஒரு நாட்டுக்குள் நுழைந்தான். ஊரே கோலாகலமாக இருந்தது.

அந்த நாட்டு இளவரசி தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தாள். வேலைக்காரனுக்கு ஆசை, எப்படியும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டு நாம் இந்த நாட்டின் அரசனாக வேண்டும் என ஆசைப்பட்டான்.

போட்டியில் கலந்து கொண்டான். போட்டியில் வெற்றி பெறவில்லை என்றால் சிறையில் தள்ளி விடுவார்கள்.

போட்டி ஆரம்பமானது. அவனை ஒரு குளத்திற்குக் கூட்டிப் போனார்கள். குளத்திற்குள் ஒரு மோதிரத்தை போட்டு அதனை எடுக்க வேண்டும் என கட்டளையிட்டார்கள். அவன் பயந்து மலைத்து நின்றான்.

குளத்திற்குள் நீந்த ஆரம்பித்த அவனுக்கு ஆச்சரியம்....! "இதோ உங்கள் மோதிரம்" என்று ஒரு குரல் கேட்டது. ஒரு மீன் தன் வாயில் மோதிரத்தைக் கவ்விக்கொண்டு வந்திருந்தது. அது அவன் புதரிலிருந்து காப்பாற்றிய மீன்.

இளவரசி அடுத்த போட்டி வைத்தாள். ஒரு மூட்டை அரிசி முழுவதும் தோட்டத்தில் கொட்டப்பட்டு விடிவதற்குள் ஒரு அரிசி விடாமல் சேகரிக்க வேண்டும். ஆகா இது நடக்கவே நடக்காது. நமக்கு சிறை தான் என்று முடிவு செய்து அவன் தூங்கி விட்டான். அவன் உதவி இருந்த எறும்புகள் ஒவ்வொன்றாக பொறுக்கி ஒரு மூட்டையில் வைத்திருந்தது. அதனால் அதிலும் ஜெயித்து விட்டான்.

இறுதியான போட்டி ஒரு தங்க அப்பிள் காய்க்கும் மரம் காட்டில் இருக்கிறது. அதைக் கண்டுபிடித்து அப்பிளை எடுத்து வர வேண்டும்.

அவன் இருட்டும் வரை தேடினான். பசுமை மரங்கள் மட்டுமே இருந்தன. தங்க மரத்தைக் காணவே இல்லை. கவலையுடன் இருட்டிய பிறகு தூங்கிவிட்டான். காலையில் எழுந்து பார்க்கிறான். அவன் அருகில் தங்க அப்பிள் இருந்தது. அவனிடம் உதவி பெற்ற காகங்கள் அந்த அப்பிளைத் தேடிக் கொண்டு வந்து அவனிடம் போட்டிருந்தன. அவன் அவைகளுக்கு நன்றி தெரிவித்தான்.

எல்லாப்போட்டியிலும் ஜெயித்ததால் அவனை இளவரசி மணந்து கொண்டாள். அவன் ராஜாவாக அவளுடன் அந்த நாட்டை மகிழ்ச்சியுடன் வெகுநாள் ஆட்சி செய்தான்.

நாம் செய்த உதவி வீணாகாது. அது நமக்கு ஏதாவதொரு வகையில் எப்போதாவது பயன் தரும். நாம் யாரேனும் ஒருவருக்கு உதவி செய்து விட்டு மறந்து விட்டாலும்கூட அது பின்னொருநாளில் நமக்கு யார் வாயிலாகவாவது கிடைக்கும்.

"செய்த உதவியும் இட்டு வைத்த விதையும் வீணாகப் போகாது"

மிக மிக அவசியமான நேரத்தில் செய்யப்படும் உதவி இந்த உலகை விட மிகப் பெரியது.

## சிந்தனைத் துளிகள்

✦மனிதன் கல்லை விட கடினமானவன்.
அதேசமயம், ரோஜா மலரை விட மென்மையானவன்!

✦பேசும் முன் கேளுங்கள்
எழுதும் முன் யோசியுங்கள்
செலவழிக்கும் முன் சம்பாதியுங்கள்
முதலீடு செய்யும் முன் விசாரியுங்கள்
குற்றம் செய்யும் முன் நிதானியுங்கள்
ஓய்வு பெறும் முன் சேமியுங்கள்
இறப்பதற்கு முன் தர்மம் செய்யுங்கள்.

✦வருவதும், போவதும்-இன்பம், துன்பம்
வந்தால் போகாது-புகழ், பழி
போனால் வராது-மானம், உயிர்
தானாக வருவது-இளமை, மூப்பு
நம்முடன் வருவது-பாவம், புண்ணியம்.

✦துன்பங்கள் நிரந்தரமானவை அல்ல,
அவை எப்போதும் பாலத்தின் அடியில் ஓடுகின்ற
தண்ணீரைப் போல் ஓடி விடும்.

✦"நான்" என்று நினைக்காதீர்கள்
நினைத்தால் ஆண்டவன் "தான்" என்பதைக் காட்டி விடுவான்

✦பிறர் துன்பத்தைக் கண்டு வருந்துவது மனித குணம்
பிறர் துன்பத்தைக் கண்டு நீக்குவது தெய்வ குணம்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.09 19

❖1658-யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க மத குருமாரை மறைத்து வைத்திருப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.

❖1870-பிரான்சுக்கும் புருசியாவுக்கும் இடம்பெற்ற போரில் பாரிஸ் நகரைக் கைப்பற்றும் நிகழ்வு ஆரம்பமானது. பாரிஸ் 1871, ஜனவரி 28 இல் புருசியாவிடம் வீழ்ந்தது.

❖1881-ஜூலை 2 இல் சுடப்பட்டுப் படுகாயமடைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்ஃபீல்ட் இறந்தார்.

❖1893-சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.

❖1893-நியூசிலாந்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடானது.

❖1997-அல்ஜீரியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் 53 கிராம மக்களைப் படுகொலை செய்தனர்.

❖2006-தாய்லாந்தில் இராணுவப் புரட்சியில் இராணுவத் தளபதி சோந்தி பூன்யா ரத்கிலின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

### பிறப்புகள்

❖1749-சான் பாப்திசுத்து யோசப் டெலாம்பர், பிரான்சிய வானியலாளர், கணிதவியலாளர்(இ. 1822)

❖1886-பாசல் அலி, இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி (இ. 1959)

❖1911-வில்லியம் கோல்டிங், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய எழுத்தாளர் (இ. 1993)

❖1925-எம்.பி.ஸ்ரீநிவாசன், தென்னிந்திய இசை அமைப்பாளர் (இ. 1988)

❖1937-சரோஜா வைத்தியநாதன், பரதநாட்டியக் கலைஞர்

❖1965-சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீராங்கனை

❖1976-இஷா கோப்பிகர், இந்தியத் திரைப்பட நடிகை

❖1980-மேக்னா நாயுடு, இந்தியத் திரைப்பட நடிகை

❖1984-காவ்யா மாதவன், தென்னிந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

❖1936-விஷ்ணு நாராயண் பாத்கண்டே, இந்திய இசைக்கலைஞர் (பி. 1860)

❖1980-கே.பி.சுந்தராம்பாள், தமிழிசை, நாடகக் கலைஞர் (பி. 1908)

❖ 2014-உ.ஸ்ரீநிவாஸ், மேண்டலின் இசைக் கலைஞர் (பி. 1969)

### சிறப்பு நாள்

❖விடுதலை நாள், (செயிண்ட் கிட்சும் நெவிசும், ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து 1983)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 90 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 120 | 100 |
| தக்காளி | 40 | 20 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 130 | 60 | 120 | 160 |
| கரட் | 150 | 180 | 280 | 160 |
| பூசணி | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 60 | 30 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 50 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 90 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 70 | 55 | 100 | 120 |
| பயற்றங்காய் | 50 | 30 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 55 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 80 | 120 |
| போஞ்சி | 140 | 110 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 150 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 30-50 | 50 |
| இராசவள்ளி | 160 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 80 | 160 | 100 |
| முள்ளங்கி | 60 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 110 | 60 | 40 |

வெள்ளம் வரும்முன் அணை கட்ட வேண்டும்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட பகுதியில் நடக்கும் விபத்து மரணம் புகையிரதத் திணைக்களம் பாராமுகம்

வட பகுதிக்கான புகையிரத சேவை மீள ஆரம்பிக்கப்பட்டால், அது மிகப்பெரிய நன்மையாக அமையும் என்ற எதிர்பார்ப்பு வடபுலத்து மக்களிடம் இருந்தது.

எனினும் வடபுலத்துக்கான புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், புகையிரதம் மோதி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, ஏன்தான் இந்த நாசம் வந்தது என்று எண்ணுமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

அந்தளவுக்கு நாளுக்கு நாள் புகையிரதம் மோதிப் பலியாகின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலை பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் நடந்தேறுகின்றது என்பது அனைவருக்கும் நன்கு தெரியும்.

இவ்வாறு பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் கணிசமாக இருக்கின்ற போதிலும் அது தொடர்பில் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் எந்தவித கருசனையும் எடுக்கவில்லை என்றே கூறவேண்டும்.

புகையிரத சேவை முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட காலங்களில்கூட புகையிரதப் பாதையை ஊடறுத்துச் செல்கின்ற வீதிகள், ஒழுங்கைகள் இருந்தபோதும் அவைகூட அவ்வாறு இருக்கவில்லை என்று கூறி அவற்றுக்கு எந்தவித பாதுகாப்பும் செய்யாமல் புகையிரதத் திணைக்களம் பாராமுகமாக இருக்கின்றது.

அந்தளவில் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் வடபுலத்தில் புகையிரதம் மோதுவதால் நடக்கும் மரணங்களைக் கருசனையில் எடுக்கவில்லை என்பது தெரிகின்றது.

தவிர, வடக்குக்கு மீண்டும் புகையிரதப் பாதை அமைத்தபோது பாதுகாப்பற்ற கடவைகளைப் பாதுகாப்பான கடவைகளாக மாற்றுக என்று பல நாட்களாக மக்கள் போராட்டம் நடத்த வேண்டிய தேவையும் இருந்தது.

எனினும் எத்தனையோ கடவைகள் இன்னமும் பாதுகாப்பற்றவையாக இருக்கின்றன. இருந்தும் இவை தொடர்பில் புகையிரதத் திணைக்களம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இவற்றுக்கு மேலாக புகையிரதப் பாதை அமைப்பதில் வடபுலத்து மக்களின் கருத்துக்கள் செவிமடுக்கப்படவில்லை என்பதும் இங்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மை.

அதாவது வடக்குக்கான புகையிரதப் பாதையை இந்தளவு தூரம் உயர்த்துவதன் தேவை என்ன? என்ற கேள்வி அப்போது மக்களிடம் எழுந்ததாயினும் இவை பற்றி எடுத்துரைக்க வேண்டிய மக்கள் பிரதிநிதிகளும் துறைசார் நிபுணர்களும் பேசாதிருக்க; வடக்குக்கான புகையிரதப் பாதைகள் அளவு கடந்து உயர்ந்தன.

இதனால் அந்தப் பாதையூடாக வாகனங்களை ஏற்றி இறக்குவது முதல், புகையிரதம் வருகிறதா என்பதை அவதானிக்க முடியாத இக்கட்டான சூழ்நிலையும் குடியிருப்புக் காணிகளுக்குள் மழை நீர் தேங்கி நிற்பது வரையான பாதகங்கள் நடந்தவண்ணமுள்ளன.

இருந்தும் புகையிரதத் திணைக்களம் எந்தக் கவனிப்பும் எடுக்காமல் இருப்பதுதான் மிகப்பெரும் வேதனை.

## மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கும் தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை

### முன்னாள் முதல்வர் நஷீர் தெரிவிப்பு

(ஏறாவூர்)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கும் தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட், சொந்த தொழில்சார்ந்த விடயங்களில் முழு நேரம் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திகளை சீராக முன்னெடுத்ததுடன் அதற்கான நிதி மூலங்கள் பல்வேறு வழிகளிலும் பெற்றுக் கொடுக்க முடிந்தது. ஆனால் தற்போது அபிவிருத்தி என்பது வெறும் பூச்சிய மாகவே உள்ளது.

ஒருபக்கம் அபிவிருத்தியை முன்னெடுத்த அதே வேளை மறுபக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வளர்ச்சிப் பாதைக்கும் கொண்டு செல்ல முடிந்தது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கல்குடாவின் மாகாணசபை பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட ஒன்றிணைந்து பணியாற்றவும் அதனை பெற்றுக் கொடுப்பதற்கான பல்வேறு வழிகள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றேன்.

ஏறாவூரில் அமையப்பெற்ற தொழிற்சாலையைப் போன்று இப் பிரதேச யுவதிகளின் வேலையில்லா பிரச்சினைகளுக்கு முடிவு காணும் வகையில் தொழிற்சாலைகளை எதிர்காலத்தில் உருவாக்க திட்டமிட்டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாமல் குமாரவுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

ஊழல் எதிர்ப்புப் படையணியின் செயற்பாட்டுப் பணிப்பாளர் நாமல் குமாரவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர நாலக சில்வா குறித்து அவர் வெளியிட்ட ஒலிப்பதிவுகள் தொடர்பில் நேற்று முன்தினம் அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் 10 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

நாமல் குமாரவின் கைத்தொலைபேசியும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## கசிப்பு உற்பத்தி பெண் கைது!

துன்னாலை குடவத்தை பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கசிப்பு வடித்தமை தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார ஒன்றரை லீற்றர் கசிப்பு, கோடா மற்றும் உபகரணங்களை மீட்டுள்ளனர். (இ-60)

## தியாகி திலீபனுக்கு அஞ்சலி

(கரணவாய்)

தியாகி திலீபனுக்கும் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் இலங்கை விமானப் படையினர் குண்டு வீசி படுகொலை செய்த 22 மாணவர்களுக்கும் பருத்தித்துறை பிரதேச சபை கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முறபகல் பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் த.தே.கூட்டமைப்பின் பிரதேசசபை உறுப்பினர் சுரேஷ்குமார் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

இதில் அஹிம்சை போராட்டம் நடத்தி உயிர்நீத்த தியாகி திலீபனுக்கும் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் விமானப்படையின் குண்டுவீச்சு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 22 மாணவர்களுக்கும் அஞ்சலி செலுத்த வேண்டும என தெரிவித்தார்.

இதனை ஏற்றுக் கொண்டு அனைவரும் அஞ்சலி செலுத்தினர். (இ-60)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் தவசிக்குளம கிராமம், அண்ணா நகர், சிறீநகர், பூந்தோட்டம் கைத்தொழிற் பேட்டை, புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிப் புலவு வீட்டுத்திட்டம், புளிதறித்த புளியங்குளம் வீட்டுத் திட்டம், பட்டாணிச் சூரிலிருந்து மதவுவைத்த குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## ஜீப் மோதியதில் மாணவி பலி! அதிர்ச்சியில் இரு மாணவிகள்

(புத்தளம்)

புத்தளம் - குருநாகல் வீதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவியொருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை பாடசாலை விட்டு வீடு செல்லும் போது இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை நிறைவடைந்த நிலையில் 3 மாணவிகள் பேருந்தில் சென்று இறங்கி பாதை ஓரமாக நடந்து சென்றபோது குறித்த வீதியால்சென்ற ஜீப் மாணவி மீது மோதியுள்ளது.

விபத்தில் காயமடைந்த குறித்த மாணவி உடனடியாக புத்தளம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

எனினும் மற்றைய இரு மாணவிகளும் காயம எதுவுமின்றி உயிர் தப்பியுள்ள போதும் அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். (இ-7)

## புனித பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை யாழ்.சின்மயா மிஷனின ஆலோசனையில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு புனித திருத்தல பாத யாத்திரையை எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்திலிருந்து சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் ஆரம்பிக்கிறது.

பல்வேறு ஆலயங்களைத் தரிசித்து தேர்த் திரு. விழா அன்று வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தைச் சென்றடையும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## மின்சாரம் தாக்கியதில் ஒருவர் படுகாயம்

கொடிகாமம் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் தென்னோலை வெட்டிய நபரொருவர் மின்சாரம் தாக்கி தூக்கி வீசியதில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மின்சார கம்பியின் மேல் தென்னோலை இருந்ததன் காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தவசிகுளம் கொடிகாமத்தைச் சேர்ந்த 35 வயதான நபரே முதுகுப் பகுதியில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-30)

## பாம்புக்கடிக்கு இலக்கானவர் வைத்தியசாலையில் அனுமதி

பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுருட்டைப் பாம்புக் கடிக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நபர் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரியைச் சேர்ந்த 61 வயது அ.சூசைதாஸ் என்பவரே தனது வயலினைப் பார்வையிடச் சென்றபோது பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளார். (இ-30)

## புகையிரதத்துடன் மோதி ஐந்து யானைகள் பலி!

(ஹபரணை)

ஹபரணை - பலுகஸ்வெவ புகையிரத நிலையங்களுக்கு இடையில் 127வது கிலோமீற்றர் கட்டைக்கு அருகில் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோதி ஐந்து யானைகள் உயிரிழந்துள்ளன.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து காரணமாக புகையிரதமும் தடம் புரண்டுள்ளது.

மட்டக்களப்பு நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்ற புகையிரதமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (இ-7)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### முதலில் கடவுளைத் தேடு!



- முதலில் கடவுளைத் தேடு. அதன்பின், உலகப் பொருட்களை தேடி செல்லலாம்.
- எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார். ஆனால, கடவுளிடத்தில் எல்லா மனிதர்களும் இருப்பதில்லை.
- மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரிதானது. இதை பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.
- கடவுளின் திருநாமத்தை இடைவிடாது ஜெபித்தால் உடல், மனம் எல்லாம் தூய்மை பெறும்.
- நம்பிக்கை ஆழமானால் கடலையும் தாண்டலாம். ராம நாமத்தின் மீது கொண்ட நம்பிக்கையால் அனுமன் இதை சாதித்தான்.

## கோல்மழை பொழிந்தது மன்னார் ஜோசப்வாஸ்




அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியின், முதற்சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெறுகின்றது.

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் மன்னார் ஜோசப்வாஸ் ஐக்கிய அணியை எதிர்த்து பொற்பதி அணி மோதியது. இதில் மன்னார் ஜோசப்வாஸ் அணி, 06:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக மன்னார் அணியின் டினோஸன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

## மெலிஞ்சிமுனை இருதயராசா அணிக்கு வெற்றி






அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில் மெலிஞ்சிமுனை இருதயராசா அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது.

இதில் மெலிஞ்சிமுனை இருதயராசா அணி, 03:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக மெலிஞ்சிமுனை அணியின் அருள்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

## முல்லை. சுப்பராங் அணிக்கு வெற்றி






அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப் பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டமொன்றில் முல்லை சுப்பராங் அணியை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய அணி மோதியது.

இதில் முல்லை சுப்பராங் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக முல்லை அணியின் உதயவர்மன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

## கைதடி தென்கிழக்கு
## விநாயகர் சனசமூக நிலையத்தின்
## மாபெரும் தாச்சிப் போட்டி முடிவுகள்

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தென்மராட்சி ரீதியில் நடைபெற்று வரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கைதடி வடக்கு செவின்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி தெற்கு மின்னொளி விளையாட் டுக் கழகம் மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக் கழகம் 9:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி அரையிறுதிக்கு தெரிவாகியது.

இதேவேளை இன்று இரவு 8 மணிக்கு நடைபெற வுள்ள காலிறுதிப்போட்டியில் கைதடி மத்தி உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகம் மோத வுள்ளது. (க)

## உலக பல்கலைக்கழக வலைப்பந்தாட்டம்
## யாழ்.பல்கலையில் இருவர் தெரிவு



செல்வி.சி.சுரேந்தினி அணிப் பயிற்றுவிப்பாளர் | செல்வி.ற.சாம்பவி அணி வீராங்கனை

கடந்த 17ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வரை கம்பாலா, உகண்டாவில் இடம் பெறவுள்ள உலகப் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இலங்கைப் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணி பங்குபற்றுகின்றது.

இவ்வணியின் பயிற்றுவிப்பாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியர் செல்வி. சுரேந்தினி சிதம்பரநாதன் கடமையாற்றுகின்றார். மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வலைப் பந்தாட்ட அணிவீராங்கனை செல்வி. சாம்பவி றமணன் (மருத்துவபீடம்) இவ்வணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணி வீராங்கனையொருவரும், அலுவலகர் ஒருவரும் உலகப் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றமை இதுவே முதல்தடவை என்பதோடு பெருமைக்குரியதொன்றாகும். இவ்வணியானது இலங்கையில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை உகண்டா பயணமாகினார். (க)

## உதயசாந் சிறப்பாட்டம்
## ரைரோன் அணி இலகுவெற்றி



ஏ.பி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் இருபது - 20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

லீக் முறையில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில், இரண்டாம் சுற்று ஆட்டங்கள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

16 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் சுற்று லீக் ஆட்டமொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியை எதிர்த்து ரைரோன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. துடுப் பாட்டத்தில் கோகுலன் 45, சிவராஜ் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். .

பந்துவீச்சில் ரைரோன் அணி சார்பாக, டெஸ்மன் மற்றும் அஜந்தன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் செந்திரன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

134 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய ரைரோன் அணி, 18.2 ஓவர்களில் 7 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் உதயசாந் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும் மணாளன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் திருநெல்வேலி சி.சி அணி சார்பாக, சிவராஜ் 3 விக்கெட்களை கைப்பற்றினார். (க-26)

## இலங்கை கல்வித் தரத்தை...

அரசு உறுதுணையாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசால் யாழ்.பொது நூலகத்திற்கு 50 ஆயிரம் புத்தகங்களை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

நாடு வளம்பெற வேண்டுமாயின், அதன் ஒரு பகுதி வளம்பெற வேண்டுமாயின் கல்வியினால் தான் வளம்பெறும் என எமது முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டு அரசைப் பொறுத்தவரையில், தமிழக முதலமைச்சரும், துணை முதலமைச்சரும், யாழ் நூலகத்துக்கு நூல் வழங்கும் இந்த செயற்திட்டம் தொடர்பாக தெரிவித்த போது, சென்று வருமாறு அனுமதி வழங்கினார்கள்.

அமைச்சரவை என்பது கூட்டு முயற்சி, இராமர் இலங்கை வருகின்ற போது, பாலம் அமைப்பதற்கு அணில் உதவி செய்ததைப் போன்று, யாழ்ப்பாண நூலகம் சிறப்பாக இயங்குவதற்கு அணிலாக இருந்து இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளேன் என்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அம்மாவின் வழிகாட்டலில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு, மேலும் இந்தப் பணிகளை முன்னெடுக்கும்.

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களின் நலன்கருதி பல உதவித்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அதேநேரம், மலேசியா உள்ளிட்ட நாடுகளில் வாழும் தமிழர்கள் தமக்கும் நூல்கள் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்கள். அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக நூல்களை வழங்க ஏற்பாடுகள் செய்து வருகின்றோம்.

வளர்ந்து வரும் பகுதிகளில் 8 நூலகங்களை தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. பிஞ்சுக் குழந்தைக்ளின் நடன கலாசாரங்களைப் பார்க்கின்ற போது, இவர்களின் திறமையும் ஆற்றலும், இவர்களை ஊக்கப்படுத்தினாலே போதும், இந்த மண்ணில் சிறந்த கல்வியாளர்களை காண முடியுமென தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தினால் நல்ல கல்வியாளர்களை உருவாக்க முடியும். மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும், ஒருங்கிணைந்து இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இவற்றிற்கு இந்திய மத்திய அரசாங்கமும், இதற்கான ஒருங்கிணைப்பினை வழங்கி வருகின்றதென்பதனை உணர முடிகின்றது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து பல செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர். அதற்கு தமிழக அரசின ஒத்துழைப்பும் உறுதுணையாகவும் இருக்கும்.

இந்தியாவில் உள்ள ஆராய்ச்சி மையங்கள் போன்று, யாழ்ப்பாணத்திலும் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மென விவசாய கமநல பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள்விடுத்துள்ளார். தமிழக முதலமைச்சருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மையங்களை அமைப்பதற்கு உதவ வேண்டுமென கல்வி அமைச்சர் விடுத்த வேண்டுகோளையும், தமிழக முதலமைச்சரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அடிமட்டத்தில் இருப்பவர்களை உயர்த்துவதற்கு கல்வியால் மாத்திரமே முடியும், அந்த கல்வியை மேம்படுத்த தமிழக அரசு எப்போதும் உறுதியாக இருக்கும்.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு மட்டுமன்றி மத்திய அரசும் பல உதவித்திட்டங்கள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மேலும் மேலும் அந்த உதவித்திட்டங்களை செய்ய உறுதுணையாக இருப்போம் என மேலும் தெரிவித்தார். (ம-9,101)

## மகசின் சிறைச்சாலையில்...

வருகின்றனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த மதியரசன் சுலக்ஷன், இராசதுரை திருவருள், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், இராசபல்லவன் தபோரூபன், இராசதுரை ஜெகன், சூரியகாந்தி யெஜச்சந்திரன், கிளிநொச்சியை சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன், வவுனியாவை சேர்ந்த தங்கவேல் நிமலன் ஆகிய 8 கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சென்று பார்வையிட்டிருந்தார். அவரும் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்தி இரண்டொரு நாளில் சாதகமான பதிலை தருவதாக கைதிகளிடம் கூறி சென்றுள்ளார்.

அவரின் வாக்குறுதியை நம்பி தமக்கு சாதகமான பதில் வரும் என எதிர்பார்த்து இன்று 6 ஆறாவது நாளாக தமது உடல் சோர்வடைந்த நிலையில் உணவு தவிர்ப்பை தொடர்ந்து வருகின்றனர். (ம-9)

## குற்றவாளிகளை தண்டிக்க...

பசாரத்தை தொடர்ந்து அவர்களின் பிரச்சினைகளை சுவிஸ் அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு, கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில், தற்போதைய அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் உள்ளிட்ட அறுவர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, சுமார் 6 மாத கால குற்றப்புலனாய்வு பிரிவினரின் விசாரணையை தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பலாலி விமான அபிவிருத்தியை...

எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வோம். அதேவேளை உள்நாட்டு விமான சேவையை பலப்படுத்த வேண்டியுள்ளது.

அந்தவகையில் பலாலி மட்டுமன்றி கண்டி திகன உட்பட ஏனைய பகுதிகளிலும் விஸ்தரிப்பு நடவடிக்கை இடம்பெறும்.

பலாலி விமானநிலையத்தின் அபிவிருத்திப் பணியைகூட இந்தியாவிடம் கையளிக்க நாம் விரும்பவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய சிவில் விமான சேவைகள் அதிகார சபை தயாராகிவருவதாக "த டைம்ஸ் ஒப் இந்தியா" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புத்தரின் உருவம் பொறித்த...

ணிக்கு எதிரான குற்றப்பகிர்வை முன்வைக்க சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அனுமதி வழங்குமாறு பொலிஸாரிடம கோரியமைக்கு அமைய ஒப்புதல் வழங்கிய நீதிமன்றம் வழக்கை வரும் ஜனவரி 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை புத்தரின் உருவம் பொறித்த சேலை அணிந்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் சட்டத்தரணி ஒருவரை யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்குள் பொலிஸார் தேடியிருந்தனர்.

இந்த சம்பவம் கடந்த 12ஆம் திகதி புதன் கிழமை இடம்பெற்றது.

பொலிஸார் அவசர இலக்கமான 119 இற்கு வந்த முறைப்பாட்டின் அடிப்படையில் தாம் அந்தச் சட்டத்தரணியிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அவ்ரைக் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் எனவும் அங்கிருந்த சட்டத்தரணிகளிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பொலிஸாரினால் தேடப்பட்ட சட்டத்தரணி நீதிமன்ற வளாகத்திலிருந்து வீடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் நீதிமன்ற வளாகத்துக்குள் மீளவும் வருகை தந்த சம்பந்தப்பட்ட பெண் சட்டத்தரணியை யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவியான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்யுசிங்கம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று வாக்குமூலம் வழங்க வைத்தார். எனினும் குறித்த பெண் சட்டத்தரணி, பொலிஸ நிலையத்திற்கு சென்றிருந்த வேளை புத்தரின் உருவம் பொறித்த சேலையை அணித்திருக்கவில்லை.

இந்தியாவிலுள்ள நண்பர் ஒருவரால் தனக்கு சேலை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதில் புத்த பெருமானுடைய உருவம் பொறிக்கப்பட்டுள்ளது என்று தான் அறிந்திருக்கவில்லை. புத்தரை அவமதிக்கும் எண்ணத்தில் தான் அந்தச் சேலையை அணிந்திருக்கவில்லையென இளம் பெண் சட்டத்தரணி தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையே எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய புத்தர் உருவம் பொறித்த சேலை அணிந்த விவகாரம் மேற்கொண்ட நடவடிக்கை எடுப்பதிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பெண் சட்டத்தரணி, புத்தர் உருவம் பொறித்த சேலை அணிந்து வந்த விவகாரத்தை நீதிமன்றுக்கு பொலிஸா கொண்டு வந்துள்ளனர். (ம-9)

## இணுவில் பகுதியில்
# வீதியோரங்களில் நடப்பட்ட மரங்கள் விசமிகளால் சேதம்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பகுதியில் வீதியோரம் நடப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் மரங்கள் விசமிகளால் வெட்டி எறியப்பட்ட சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வலி.தெற்கு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களால் கே.கே.எஸ் வீதியில் கடந்த முதலாம் திகதி நிழல் தரும் மரங்கள் 200 நாட்டப்பட்டது.

அவை தொடர்ச்சியாக பராமரிக்கப்பட்டு வந்திருந்த நிலையில் 9 மரங்களை நேற்று அதிகாலை விசமிகள் சிலர் முறித்தும் கத்தியால் வெட்டியும் உள்ளனர்,

பொது எண்ணத்துடன் வீதியில் நடப்பட்டு பராமரிக்கப்படும் மரங்களை இவ்வாறு தீய எண்ணத்துடன் அழிப்பது வருந்தத்தக்க விடயம் என தெரிவித்துள்ள இளைஞர்கள், இது குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் மரங்களை பாதுகாக்குமாறும கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-9)

# புகையிரதங்களை வழிமறித்து வவுனியாவில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

ஓமந்தைப் பகுதியில் புகையிரதம் ஒன்று காருடன் மோதிய விபத்தில் நால்வர் உயிரிழந்தமை தொடர்பில் இன்றைய தினம் பொதுமக்களால் குறித்த புகையிரத பாதையினை மறித்து போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிய முடிகிறது.

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் வேளையில் கார் ஒன்று பயணித்த நிலையில் பாதுகாப்பு அற்ற கடவையில் காரை செலுத்த முற்பட்ட போது புகையிரதத்துடன் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் நால்வர் உயிரிழந்ததோடு மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இதனால் குறித்த விபத்து இடம்பெற்ற பகுதியில் பாதுகாப்பு கடவையை அமைக்க வலியுறுத்தியே இன்றைய தினம் புகையிரத பாதையில் மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது. குறித்த போராட்டத்திற்காக உள்ளூரில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டம் இடம்பெறும் நேரத்தில் பயணிக்கும் புகையிரதங்கள் வழி மறிக்கப்பட்டு தமது கோரிக்கையினை நிறைவேற்ற கோரிக்கை விடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-9)

# ராஜீவ்காந்தி குற்றவாளிகளின் விடுதலையில் எதுவும் கூறமுடியாது
## என்கிறார் கே.ஏ.செங்கோட்டையன்

(யாழ்ப்பாணம்)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைதானவர்களின் விடுதலை தொடர்பில் எதுவும் கூற முடியாது என யாழ்.வந்த இந்திய தமிழக அரசின் கல்வி அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று செவ்வாய் கிழமை வருகை தந்த இந்திய தமிழக அரசின் கல்வி அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் யாழ்.பொது நூலகத்திற்கு 50 ஆயிரம் புத்தகங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வின் முடிவில் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் ராஜீவ்காந்தி கொலை வழக்கில கைதான 7 பேர் தொடர்பில் தமிழக அரசு முடிவுகளை எடுக்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், தமிழக அரசின் அது தொடர்பான நடவடிக்கை எந்த வகையில் உள்ளது என்று கேள்வி எழுப்பியிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர்களின் விடுதலை தொடர்பில் என்னால் கருத்துக் கூற முடியாது. அது தொடர்பில் கருத்துக்களை கூறுவதற்கு அமைச்சரவையினால் மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் மட்டுமே இது தொடர்பில் கருத்துக்களையோ, அல்லது கேள்விகளுக்கான பதில்களையோ கூறுவார் என்று மழுப்பலாக பதிலளித்திருந்தார். (ம-9)


செவன
திகதி 2018/09/18
சீட்டிழுப்பு இலக்கம் 119
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 17 47 68 69

நீரோகா
திகதி 2018/09/18
சீட்டிழுப்பு இலக்கம் 448
லக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 17 30 48 49
போனஸ் இலக்கம் 14

மஹஜன சம்பத
திகதி 2018/09/18
சீட்டிழுப்பு இலக்கம் 3749
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 9 5 0 1 6

கொவிசெத
திகதி 2018.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 1886
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 08 47 54 64

தேசிய லொத்தர் சபை

## விக்னேஸ்வரனு...

அமைச்சர் டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பாக கடந்த 7 ஆம் திகதி நீதிமன்றில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது குறித்த மனு மீதான வழக்கை விசாரித்த நீதிபதி, இன்றைய (நேற்று) திகதியில் மீண்டும் முன்னிலையாகுமாறு விக்னேஸ்வரனுக்கு உத்தரவு பிறப்பித்து வழக்கை ஒத்திவைத்திருந்தார்.

இந்நிலையிலேயே நேற்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் குறித்த வழக்கு விசாரணைகள் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## சர்வதேச சுற்று...

ளில் நடைபெறவுள்ள சுற்றுலா தின நிகழ்வு தொடர்பாக வடக்கு மாகாண சுற்றுலா பணியக அதிகாரிகள் உடனான ஊடக சந்திப்பு நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு மேற்குறித்த நிகழ்வு தொடர்பாக விளக்கமளித்த வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா இதனை தெரிவித்தார். (ம-9)

## விஜயகலா எம்.பி...

தொடர்பான கருத்து தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாக சபாநாயகரான நீங்கள் இந்த சபைக்கு அறிவித்திருந்தீர்கள். அதன்படி சட்டமா அதிபரினால் அது தொடர்பான ஆலோசனை வழங்கப்பட்டதா? அது வழங்கப்பட்டிருந்தால் அது என்ன? அவ்வாறு வழங்கப்படாவிட்டால் அதனை எப்போது பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றீர்கள்? என சபாநாயகரிடம் விமல் வீரவன்ச கேள்வியெழுப்பினார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர், சட்டமா அதிபர் தேவையான நடவடிக்கையெடுப்பதாக தெரிவித்துள்ளார். தற்போது வழக்கு தொடரவும் நடவடிக்கையெடுத்துள்ளார் என தெரிவித்தார். (ம)

## சீனி விலை அதிக...

ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பால் மாவின் விலை 25 ரூபாயால் குறைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நேற்று மாலை கூடி வாழ்க்கைச் செலவு குழு கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## 195 ரூபாயால்...

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளமையை கவனத்தில் கொண்டு சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலையை 325 ரூபாயில் அதிகரிக்குமாறு எரிவாயு நிறுவனங்கள், வாழ்க்கை செலவுகள் தொடர்பான குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் 325 ரூபாயினால் அதிகரிக்க முடியாது எனவும் 195 ரூபாய் அதிகரிக்க குழு இணங்கியுள்ளது. ஆயினும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.(ம)

## திடீர் மூச்சுத் திண...

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த சத்தியசீலன் மதுசன் (வயது8) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளையெனவும் ஆரம்பத்தில் குறித்த சிறுவன் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவரெனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## புகையிரத விபத்...

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர், இலங்கை மின்சார சபை அத்தியட்சகர், யாழ்ப்பாண வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட புகையிரத திணைக்களத்தின் பொறியியலாளர் கருத்துக்கூறுகையில், புகையிரதம் மோதியதில் நிகழ்ந்த விபத்து மரணங்கள் அனைத்தும் பாதுகாப்பற்ற கடவைகளில் நடந்துள்ளன.

பாதுகாப்பற்ற கடவைகள், வாகனப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டவை அல்ல. எனினும் மக்கள் புகையிரதப் பாதையில் கல், மண் என்பவற்றை நிரப்பி பாதுகாப்பற்ற கடவைகளை உருவாக்கியுள்ளனர். இதன்காரணமாகவே விபத்து மரணங்கள் நடக்கின்றன எனக் கூறியுள்ளார்.

இதன்போது ஏற்கெனவே புகையிரதப் பாதையை ஊடறுக்கும் வீதிகள் இருந்த போதிலும் அவற்றையும் பாதுகாப்பற்ற கடவைகள் என புகையிரதத் திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளதென அங்கு பிரசன்னமாகி இருந்தவர்கள் கூறினர்.

இதற்குப் பதிலளித்த புகையிரதத் திணைக்களப் பொறியியலாளர், மேற்படி பாதுகாப்பற்ற கடவைகளை அந்தந்தப் பிரதேச செயலர்கள் உறுதிப்படுத்தித் தந்துள்ளனர்.

அவர்களின் உறுதிப்படுத்தலின் அடிப்படையிலேயே பாதுகாப்பற்ற கடவைகளை புகையிரதத் திணைக்களம் அடையாளப்படுத்தியது எனக் கூறினார்.

இக்கூட்டத்தின் முடிவில் பாதுகாப்பற்ற கடவைகள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து அவற்றைத் தடுக்கும் வகையில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (ம)




வேலையில்லாப் பிரச்சினைக்கு
நம்பிக்கையான தீர்வு!
வடக்கின் 1st
அரச அங்கீகாரம் பெற்ற
வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
License No. 2268
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
(சி-3872)
மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும்
மேலைத்தேய நாடுகளில்
உத்தரவாதமான வேலைவாய்ப்புக்கள்!
பணி ஒப்பந்தக் கடிதம் பெற்ற பின்னரே கட்டண அறவீடு!
077 00 38 215
இல. 221 - 1/1. மின்சார நிலைய வீதி
(2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
email: jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7609
021 567 1532

மீண்டும் பரிசுப் பொதி

யாழ். நகர் எஸ்.கனகலிங்கம் முகவர் ஊடாக 18.09.2018 இல் சீட்டிழுக்கப்பட்ட மகாஜன சம்பத 3749 DAAW மூலம் ரூபாய் இருபது இலட்சம் (2,000,000/=) வெல்லப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
-நன்றி-
எஸ்.கே.திலகவதி
தேசிய லொத்தர் சபை
யாழ் மாவட்ட விற்பனை முகவர்.

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
நிறஞ்சன் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொடர்பு:
0763836129
(5705)

வீடு வாடகைக்கு
யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 3 அறைகளுடன் கூடிய சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0775164928

Personal English Classes
அடிப்படையில் இருந்து ஆங்கில கட்டமைப்புக்களை விளங்கப்படுத்தி கற்பிக்கப்படும்.
. Free: Hand outs (over 1000 Excercises) and Books
for Contact:
071 317 3082
(5712)

Mobile Phone
Repairing Course

I Phones & Smart Phones
Hardware , Software and Unlocking
22nd Batch start on
06.October.2018
* சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
* தனிப்பட்ட கவனிப்பு.
* சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்
(CCTV Technician கற்கைநெறி 06.10.2018 முதல் ஆரம்பம்
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
076-7013060 . 021-7306000

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-3782)
● மானிப்பாய் 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELs

வெளிநாடு-உள்நாடுகளுக்கான
விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-3863)

சிற்றி சிக்கன் ஹோம் சப்பிளை
உங்களுக்கு கோழி இறைச்சி தேவையா? அழையுங்கள்... உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகின்றோம்.
0778380158, 0764719951,
0217223535, 0217223636
M.S.V பாம் டீலேர்ஸ்
கொக்குவில்
(5561)

PERSONAL CLASS
PHYSICS
➤ Group Class ஆகவும் கற்க விரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
A/L - 2019 Physics Day Class ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். கடந்த கால வினாக்கள், மாதிரி வினாக்கள், மாதிரி பரீட்சை என்பன நடத்தப்படும்.
➤ வெளிமாவட்ட மாணவர்களுக்கு தனியாகவும் நேர அட்டவணை வழங்கப்படும்.
ஆரம்பம்: 20.09.2018 வியாழன் 6.30pm
A/L - 2019: புலங்கள்
ஆரம்பம்: 21.09.2018 வெள்ளி 5.30pm
A/L - 2020: அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம்: 21.09.2018 வெள்ளி 6.30pm
ஆசிரியர்: திரு.ம.ஸ்பெல்மன் PGDE
T.P No: 0776116724
இடம்: ● 10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோவில் அருகாமை, கியூடெக் முன்பாக)
● யாழ்.நகர் மத்தியில் (Jaffna Town)
தங்க விரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்,
பொதிகள் விநியோக சேவை

அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413
(C-3862)

பதவி வெற்றிடங்கள்
எதிர்கால முன்னேற்றத்திற்காக எமது E.D.M Company யுடன் இணையுங்கள். இவ் நிறுவனமானது வட பகுதியில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பகுதியில் வாழும் இளைஞர்கள், யுவதிகளுக்கு பல தொழில்வாய்ப்புக்களை வழங்கவுள்ளது.
உங்கள் தகைமை மற்றும் திறமை அடிப்படையில் வேலைவாய்ப்பு மற்றும் பதவி வகைப்படுத்தப்படும்.
0762121409, 0770621631
(5715)

O/L உடன் 6 மாத பயிற்சிபெற்று
டுபாய், குவைத், ஓமான், சுவிஸ், நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடாவில்
ரூ.70,000 முதல் ரூ.2 இல. க்குமேல்
சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்
Tourism & 11வது அணி
Hotel Management
ஹொட்டேல் பயிற்சிநெறி
FREE ENGLISH for COMMUNICATION
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் உத்தரவாதம்!
மேலதிக விபரங்களுக்கு
0777 324 004
077 36 16 798
021 221 9 221
ஆரம்பம்
Sep. 24
திங்கட்கிழமை
No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
10க்கு மேற்பட்ட அணிகள் - 100க் கணக்கான மாணவர்கள்
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, (2ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.
www.sikaram.lk Sikaram Academy


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.